பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 6.00

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2034 மார்கழி 15 செவ்வாய்க்கிழமை (30.12.2003) தொலைபேசி - 2223378 ஒலி 11

ராம்கோ சிமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்த முடிவு!

### தெரிவுக்குழுத் தலைவர் அறிவிப்பு

(நமது நிருபர்)

தற்போது தேர்தல் நடைமுறையில் உள்ள விருப்பு வாக்குமுறையை இரத்துச் செய்து, தொகுதிவாரியான முறையையும், விகிதாசார முறையையும் சேர்த்து புதிய தேர்தல் நடைமுறையை அறிமுகப்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாகப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவரும், மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

புதிய தேர்தல் நடைமுறை ஒன்றைத் தயாரிப்பதற்காகத் தினேஷ் குணவர்த்தனா தலைமையில் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவே மேற்படி புதிய தேர்தல் நடைமுறையைக் கொண்டு வரத்திட்டமிட்டுள்ளது.

இப் புதிய தேர்தல் முறையை நடைமுறைப்படுத்தும்வரை தற்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி 2000ஆம் ஆண்டிலும் சத்தியப் பிரமாணம் எடுத்தார்

### உறுதிப்படுத்துகிறார் பிரதம நீதியரசர்

(கொழும்பு)

1999ஆம் ஆண்டு டிசம்பர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இரண்டு தடவைகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்குச் சத்தியப் பிரமாணம் செய்து வைத்துள்ளேன்.

இவ்வாறு ஜனாதிபதியின் இரகசிய சத்தியப் பிரமாணம் பற்றி ஊடகத்துறையினரின் கேள்விகளுக்குப் பதிலளித்த பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

2000ம் ஆண்டில் ஜனாதிபதி மீண்டும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். ஆனால் சரியான திகதி தெரியவில்லை என்றும் அவர் தெரிவித்தார். மேலும் 1999ம் ஆண்டு தேர்தல் நடைபெற்ற சமயத்தில் ஜனாதிபதிக்கு ஏற்பட்ட காயத்தினால் அவர் தொடர்ந்தும் பதவியில் இருக்க பொருத்தமானவரா என்ற கேள்வி எழுந்திருந்தது. அந்நேரத்தில் அவர் நிறைவேற்று முறையை ஒழிக்க விரும்பியதால் அதில் ஈடுபாடுகாட்டாதிருந்தார். பின் முடிவுகள் வெளியா

(10ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம்களை 3ஆம் தரப்பாக ஏற்க விடுதலைப் புலிகள் விரும்பவில்லை!

## முஸ்லிம் அரசியல் தலைவர்கள் கருத்து

(கொழும்பு)

**அமைச்சர் ஹக்கீமுக்கும் பிரபாகரனுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை புலிகள் நிராகரித்தமையானது சமாதானச் செயற்பாடுகளில் மூன்றாந்தரப்பாக தம்மை ஏற்க அவர்கள் விரும்பவில்லை என்பதையே காட்டுகின்றது என வடக்குக் கிழக்கு முஸ்லிம் அரசியல் தலைவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.**

அமைச்சர் ஹக்கீமுக்கும் பிரபாகரனுக்குமிடையிலான ஒப்பந்தம் 2002 ஏப்ரல் 13 அன்று செய்து கொள்ளப்பட்டது. இதன்படி வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட 65 ஆயிரம் முஸ்லிம்களுக்கு மீண்டும் அவர்களின் விவசாய நிலங்களை வழங்குதல், தமிழ்ப் பிரதேசங்களில் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பா பங்குபற்றுவது என்பன இதனுள் அடக்கப்பட்டிருந்தன என (முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார்.

இவ் ஒப்பந்தம் பல மாநாடுகளில் வைத்து சர்வதேச சமூகங்களிடம் கையளிக்கப்பட்டிருப்பினும் தற்போது அது செல்லுபடியாகது என்ற புலிகளின் அறிவிப்பால் தாம் அதிர்ச்சி

(10ஆம் பக்கம் பார்க்க)

## சுமை உந்துப் பிரிவு மூடப்பட்டிருக்கும்

(கிளிநொச்சி)

ஆயப்பகுதியின் புளியங்குளம் நிலையத்தின் 'சுமை உந்துப் பிரிவு' ஆண்டிறுதிப் பணிகளுக்காக இன்றும், நாளையும் மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் மரக்கறி, முட்டை, பனிக்கட்டி, நாளேடுகள் ஆகியவற்றைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(ந)

## ஸ்ரீ.சு.கட்சி—ஜே.வி.பி கூட்டு 2004இல் கைச்சாத்தாகும்

(கொழும்பு)

## காணாமல் போனோர் சங்கத்தினர் நீதி அமைச்சு முன்பாக போராட்டம்

(கொழும்பு)

## 2004இல் கைச்சாத்தாகும்

(கொழும்பு)

புத்தாண்டின் உதயத்துடன் ஸ்ரீல ங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி. பியும் கூட்டுமுன்னணி ஒன்றை அமைக்கவிருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செய லாளரும் பாராளுமன்ற உறுப்பின ருமான மைத்திரிபால சிறிசேன தெரி வித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையிலான கூட்டு முன்னணியை ஏற்படுத்துவதில் உள்ள இழுபறிநிலை மற்றும் தடை களைத் தாண்டி கூட்டு முன்னணி க்கான உடன்படிக்கையில் இரு கட்சிகளும் சுப நேரம் ஒன்றில் கைச்சாத் திடவுள்ளன.

இது தொடர்பான யாப்புக்கள், கொள்கைத் திட்டங்கள் என்பன பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ம)

## நாளை ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு, காணாமல் போனோர் பாதுகாவலர் சங்க உறுப்பினர்கள் மற்றும் காணாமல் போனோரின் உறவினர்கள் நேற் றுக் கொழும்பில் உள்ள நீதி அமைச்சின் அலுவலகம் முன்பாக அமைதிப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்றிருக்கும் இவர்

(10ஆம் பக்கம் பார்க்க)



### ஒஸ்ரின் பெர்ணான்டோ தலைமையிலான குழுவினர்

# யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி பற்றி அரச செயலகத்தில் நேற்று ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரச அதிபர் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தலைமையிலான குழுவினருக்குமிடையில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

நேற்று யாழ்ப்பாணத்திற்கு வந்த இக் குழுவினர் காலை 10 மணிக்கு இக் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

2004ஆம் ஆண்டில் ஒவ்வொரு துறை சார்ந்த அமைச்சுக்களின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ள அபி விருத்திப் பணிகளுக்காக அரசாங் கத்தினால் ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி, யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை ஆராய்வதை நோக் கமாகக் கொண்டு இக் கலந்துரை யாடல் மேற்கொள்ளப்பட்டது.

இக் கலந்துரையாடலின் போது அடுத்த ஆண்டில் யாழ்.மாவட் டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வீட மைப்பு, வீதி அபிவிருத்தி, சுகாதா ரத்துறைவிருத்தி, சுயதொழில் வாய்ப்பு மற்றும் பொருளாதாரத் துறைகளில் மேற்கொள்ளப்படவு ள்ள திட்டங்கள் குறித்தும் பிரஸ் தாபிக்கப்பட்டன.

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலைக் கழக பட்டமளிப்பு மார்ச்சில்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனவரி மாதம் நடாத்தத்திட்டமிடப்பட்டிருந்த யாழ். பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா மார்ச் மாதத்திற்குப் பிற்போடப் பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது. இது தொடர்பான இறுதி முடிபு இன்று நடைபெறும் பல்கலைக் கழகப் பேரவைக் கூட்டத்தில் எடுக் கப்படுமென்று பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஜனவரி மாதம் 14ஆம் திகதி பட்டமளிப்பு விழாவை நடாத்த ஏற்கனவே முடிபு செய்யப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது.

(இ-3,7)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பொதுக் கூட்டம்

(ஊர்காவற்துறை)

ஊர்காவற்துறை பிரதேச செயலக நலன்புரிச் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச-75)

## திருவாதிரை உற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஈழத்துச் சிதம்பரம் காரைநகர் திண்ணபுரம் சிவன்கோவிலில் திருவாதிரை சாந்தி மகோற்சவம் நேற்றுத் திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி தொடர்ந்து எதிர் வரும் 7ம் திகதி வரை நடைபெறவுள்ளது. (த-18)

## ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்தல்-2004

இம் மாவட்டத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தித் திட்டங்களுக்கான சிவில் கட்டுமான வேலைகளுக்கான தேவை அதிகரித்திருக்கின்ற காரணத்தினாலும், இவற்றை நிறைவேற்றுவதற்கு நிர்மாணம் பயிற்சியளிப்பு அவிருத்திக்கான நிறுவனத்தில் **(ICTAD-Institute of Construction Training and Deveiopment)**பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுடைய தொகை, தரம் என்பன போதுமானதாக இல்லாத காரணத்தினாலும் ஒப்பந்தங்களை எடுப்பதற்கு முன்வருபவர்களது தொகை குறைவாக உள்ளது. இதனை நீக்கும் முகமாகவும், கூடியளவு இத் தொழில் முயற்சியாளர்களை கவர்ந்து ஊக்குவிக்கும் முகமாகவும் தகுதியுடைய கட்டிட ஒப்பந்த வேலைகளை செய்ய விரும்பும் முயற்சியாளர்களை இச் செயலகத்தில் பதிவு செய்து அவர்களையும் இம் மாவட்டத்தில் செய்யப்படவிருக்கின்ற கட்டிட ஒப்பந்த வேலைகளைச் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந் நடைமுறையை நிதி வழங்கும் நிறுவனங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன. இவர்களினால் செய்யப்படும் வேலையளவு, அனுபவம், திறமை என்பவற்றின் அடிப்படையில் காலக்கிரமத்தில் நிர்மாணம் பயிற்சியளிப்பு அபிவிருத்திக்கான நிறுவனத்தில் இவர்களைத் தகுதியான தரத்தில் பதியப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே இம் மாவட்டத்தில் கட்டிட வேலைகளைச் செய்ய விரும்பும் ஒப்பந்தகாரர்கள் அவர்கள் ஏற்கனவே **ICTAD** நிறுவனத்தில் பதியப்பட்டிருப்பினும், பதியப்பட்டிருக்காதுவிடினும் அதனைக் கவனத்தில் கொள்ளாது இச் செயலகத்தில் தங்களைப் பதிவு செய்து கொள்ளும்படி இத்தால் வேண்டப்படுகின்றார்கள். இதற்கான படிவம் செயலக புனர்வாழ்வுப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

**செ.பத்மநாதன்.**
அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம்

29-12-2003 (சி-7070)

## புதுவருட ஆராதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.தமிழ் மிஷன் சபையில் புதுவருடத்தை ஒட்டி நாளை புதன்கிழமை இரவு 9 மணி முதல் மறுநாள் அதிகாலை வரை விஷேட புதுவருட ஆராதனைகள் நடைபெறவுள்ளன. (த.18)

## இயக்குநர் சபை நியமனம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபைத் தலைவர் உட்பட 6 இயக்குநர் சபை உறுப்பினர்களும் ராஜினாமா செய்ததை அடுத்து பொதுச் சபையில் இருந்து 6 புதிய இயக்குநர் சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப் புதிய இயக்குநர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுச் சபைக் கூட்டம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.நாகேஸ்வரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. கூட்டத்தில் யாழ். கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் எஸ்.கனகசபாபதியும் சமுகமளித்திருந்தார்.

இக் கூட்டத்திலே இளைப்பாறிய மக்கள் வங்கி முகாமையாளர் வீ.கே.ஏரம்பமூர்த்தி, பீ.பத்மநாதக்குருக்கள், எஸ்.தனபாலசிங்கம், ரீ.ஞானசிவம், எஸ்.தம்பிஐயா, எஸ்.சுவேந்தன் ஆகியோர் புதிய இயக்குநர் சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். இவ் இயக்குநர்களில் இயக்குநர் சபைத் தலைவராக வி.கே. ஏரம்பமூர்த்தியும், உபதலைவராக பீ.பத்மநாதக்குருக்களும் தெரிவு செய்யப்பட்டனர். (த-52)

## எயிட்ஸ் விழிப்புணர்வில் ஈடுபட்டோருக்கு சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

எயிட்ஸ் விழிப்புணர்வு வாரப் பணியில் ஈடுபட்டோருக்கான சேவை நலன் பாராட்டுப் பத்திரம் வழங்கும் வைபவம் நேற்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

தென்மராட்சி கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன், விழிப்புணர்வு செயற்பாடுகளுக்கான சிறப்புப் பொறுப்பாளர் அன்பரசன் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

விழிப்புணர்வு வாரப்பணியில் ஈடுபட்டோருக்கான சேவைநலன் பாராட்டுப் பத்திரங்களை அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் செம்மணன் விழிப்புணர்வு செயற்பாடுகளுக்கான சிறப்புப் பொறுப்பாளர் அன்பரசன், சாவகச்சேரி அரசியல்துறைப் பொறுப்பாளர் மாறன், தென்மராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன் உட்பட பலர் வழங்கினர். (ச)

## ஓமந்தை சோதனைச் சாவடி இரவு 8.30 வரைதிறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு ஓமந்தை இராணுவச் சோதனை நிலையம் நாளை புதன்கிழமை இரவு 8.30 மணி வரை திறந்திருக்குமென பிரிகேடியர் பராக்கிரமபண்ணிப்பிட்டிய அறிவித்துள்ளார்.

புத்தாண்டு பிறக்கும் வேளையில் மக்களின் நடமாட்டத்திற்கு உதவும் நோக்குடனேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முகமாலை சோதனை நிலையமும் நாளை இரவு 9மணி வரை திறந்திருக்குமென யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வலம்புரி செய்தியாளர்களுக்கான முக்கிய கூட்டம்

**காலம்:** 31-12-2003 (புதன்கிழமை)
**இடம்:** வலம்புரிக் கேட்போர் கூடம்
**நேரம்:** காலை 10.00 மணி

**செய்தியாளர்கள் அனைவரையும் இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.**

**நிர்வாக உத்தியோகத்தர்**





சங்குநாதம்

ஈராணில் இயற்கை அழிவு

அரசியலுக்குள் சிக்கியுள்ள நீதித்துறை

சோமதேரரின் மரணம் தந்த குழப்பம்

வியாசரின் பதில்கள்

கே.வி.குணசேகரம் எழுதும் கல்தூண்கள்... (தொடர்கதை)

மற்றும் பல அம்சங்களுடன்

வாசிக்கத் தவறாதீர்கள்

திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்

விலை ரூபா. 14.00

## இன்று ஒரு தகவல்

# நம்பிக்கை

ஒருமுறை நாரதர் தெருவழியே சென்று கொண்டிருந்தார். வழியில் ஒருவர் வேதசாஸ்திரம் படித்துக் கொண்டிருந்தார். அவர் நாரதரைப் பார்த்து "எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டார். "கடவுளைப் பார்க்கச் செல்கிறேன்!" என்றார் நாரதர். "அப்படியென்றால் அவரிடம் எனக்கு எப்போது முக்தி கிடைக்கும் என்று கேட்டுக்கொண்டு வாருங்கள்" என்றார் இவர். "சரி! கேட்டு விட்டுவருகிறேன்" என்று கூறிவிட்டு நடந்தார்.

சிறிது தூரத்தில் ஒரு மரநிழலில் ஒரு தொழிலாளி செருப்புத் தைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அந்த ஆளும் அதே மாதிரிக் கேட்டார். எனக்கு எப்போது முக்தி கிடைக்கும் என்று கடவுளிடம் கேட்டுக்கொண்டு வாருங்கள் என்றார். அவரிடமும் சரி என்று கூறிவிட்டு நாரதர் நேராக வைகுண்டத்திற்கு வந்து சேர்ந்தார் கடவுளைப் பார்த்தார்.

இவர்கள் இருவரும் கூறி அனுப்பிய விஷயத்தைப் பற்றிக்கேட்டார். அதற்குக் கடவுள் கூறினார் "அந்த செருப்புத் தைக்கும் தொழிலாளி உடல் நீத்ததும் உடனே என்னை வந்தடைவான். ஆனால் அந்த சாஸ்திரம் படித்தவர் தற்போது என்னை வந்து சேரமாட்டான். அவன் இன்னும் பல பிறவிகள் எடுத்து அங்கேயே இருக்க வேண்டியுள்ளது. எப்போது இங்கே வந்து சேருவான் என்றார்.

நாரதருக்கு இதன் ரகசியம் புரியவில்லை. "எனக்கு ஒன்றும் புரியவில்லை" என்றார். கடவுளிடம் "சீக்கிரம் புரிந்து கொள்வாய். நீ திரும்பிப் போகும் போது நான் வைகுண்டத்தில் என்ன செய்து கொண்டிருக்கின்றேன் என்று கேட்டால் ஒரு ஊசியின் துவாரத்தில் யானையை கோர்த்துக் கொண்டிருக்கின்றேன் என்று அவர்களிடம் கூறு" என்றார்.

நாரதர் பூமிக்குத் திரும்பினார். கடவுளைப் பார்த்தீர்களா? எப்படியிருக்கிறார்? என்று கேட்டார் வேதசாஸ்திரம் படித்தவர். "ஓ... பகவானா அவர் யானையை ஊசியின் காதில் நுழைத்துக் கொண்டிருக்கிறார்" என்றார் நாரதர். "ஊசியின் காதில் யானையா? அது எப்படி முடியும். நீங்கள் கூறுவதை நான் நம்பமாட்டேன்" என்று கூறிவிட்டார்.

"சரி... இவருக்கு கடவுள் மீது நம்பிக்கை இல்லை" என்று புரிந்து கொண்டார். அடுத்ததாக அந்தத் தொழிலாளி இருந்த இடத்திற்குச் சென்றார். "இறைவனைப் பார்த்தீர்களா?" என்றார் அவர். "பார்த்தேன்... ஒரு ஊசியின் துவாரத்தில் யானையைக் கோர்த்துக்கொண்டிருக்கிறார்" என்று கூறிவிட்டு நாரதர் அவரது முகத்தைக் கவனித்தார். அவரோ இதைக்கேட்டு கொஞ்சம் கூடக் கவலைப் படவில்லை. "அவரால் முடியாத காரியம் உண்டா?" என்றார்.

"என்ன இப்படிக் கூறுகிறாய்? ஊசியின் துவாரத்தில் யானையைக் கோர்க்க முடியும் என்பதை நீ நம்புகிறாயா? என்றார் நாரதர். "நிச்சயமாக நம்புகிறேன்" என்றார் இவர். "அது எப்படி" என்று.

"இதோபாருங்கள்... நான் இந்த ஆலமரத்தடியில் தான் தினமும் நான் உட்கார்ந்திருக்கிறேன். தினமும் இந்த மரத்தில் இருந்து எவ்வளவு பழம் கீழே விழுகின்றது. இந்தப்பழத்தில் இருக்கும் ஒவ்வொரு விதையிலும் ஒரு ஆலமரம் உள்ளது. ஒரு சிறு விதையினுள்ளே பெரிய ஆலமரம் இருக்கும் போது ஊசி துவாரத்தில் கடவுள் யானையை நுழைய வைத்தார் என்பதை ஒத்துக் கொள்வதில் என்ன கஷ்டம்" என்று கேட்டார்.

நாரதர் யோசித்தரர். இந்தத் தொழிலாளி வேதசாஸ்திரங்களை படிக்காவிட்டாலும் அறிவு பூர்வமாக சிந்தித்து இறைவனை நம்புகிறான். அதனால்த்தான் கடவுள் இவருக்கு விரைவாக முக்தி கிடைக்கும் என்று கடவுள் கூறினார் என்பதைப் புாந்து கொண்டார்.

இந்தக் கதையில் வரும் கடவுள் நாரதர் வைகுண் டம் எல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். ஒரு சிறு விதையினுள்ளே பெரிய ஆலமரம் தங்கிக்கொண்டிருக்கின்றது என்பது உண்மை. அந்தரத்தில் ஆயிரம் கிரகங்கள் சுற்றிக் கொண்டிருப்பது உண்மை. இந்த உண்மைகள் நமக்கு அதிசயமாகத் தெரிவதனால் அதை நம்பாமல் இருந்து விட முடியாது. இயற்கையை பரிபூரணமாக நம்புங்கள். அந்த நம்பிக்கையே நமது வாழ்வுக்கு ஆதாரம் என்பதற்குத் தான் இந்தக் கதை.

இந்தக் காலத்தில் நமது பிள்ளைகளுக்கு இது போன்ற கதைகள் தேவையில்லை. ஒரு நாள் ஒரு சிறுவனிடம் கேட்டேன். "ஏன் தம்பி கடவுள் ஒரு பானைக்குள் ஒரு யானையை நுழையவைத்துவிட்டார் என்றால் நீ அதை நம்புவாயா?" என்றேன். "சார் நான் நம்புவேன் அது ஒன்றும் பெரிய அதியம் இல்லை" என்றான். "எப்படி" என்றேன். "அந்தப் பானை அந்த யானையை விட பெரிதாக இருந்திருக்கும் அவ்வளவு தான்" என்கிறான்.

***தென்கச்சி கோ. சுவாமிநாதன்***

# புலிகளின் குரல் வானொலி சேவையை கிழக்கிற்கு விஸ்தரிக்க நடவடிக்கை

## புலிகளின் குரல் பொறுப்பாளர் ஜவான் தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திற்கும் தமது ஒலிபரப்பு ,ஒளிபரப்பு சேவையை விஸ்தரிப்பதற்கு புலிகள் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மட்டக்களப்பில் விடுவிக்கப்படாத பிரதேசங்களில் இது பரிவர்த்தனை நிலையங்களை நிறுவுவதன் மூலம் இச் சேவைகள் அங்கு விஸ்தரிக்கப்படும் என புலிகளின் குரல் பொறுப்பாளர் ஜவான் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் வானொலி பரிவர்த்தனைக்கென ஏற்கனவே அவர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருப்பினும் இதற்காக கொழும்பில் உள்ள அதிகாரிகளின் ஒப்புதல் பெறப்படவேண்டிய தேவை இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இதற்குத் தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் அனுமதி மட்டுமன்றி, பாதுகாப்பு மற்றும் மக்கள் தொடர்பாடல் அமைச்சுக்களின் அனுமதியையும் பெற வேண்டும்.

தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு உட்பட மற்றைய இரு அமைச்சுக்களும் ஜனாதிபதியின் பொறுப்பிலேயே உள்ளனவென இவ் ஆணைக்குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சியில் உள்ள பிரதான ஒலிபரப்பு நிலையம் கிழக்கிற்கு மாற்றம் செய்யப்பட விருப்பதாகவும் அத்துடன் நிதர்சனம் ஒளிபரப்பு சேவையையும் மீண்டும் இயக்க வைக்கத் திட்டமிட்டு வருவதாகவும் ஜவான் தெரிவித்துள்ளார்.

13 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இந்நிலையம் இந்திய அமைதிப்படையினரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதுடன் இதன் சேவை இடை நிறுத்தப்பட்டிருந்தது. இவ் ஒளிபரப்பு பின்னர் வன்னிக்கு மாற்றப்பட்டது. தற்போது வேறு இடங்களுக்கு விஸ்தரிக்கப்படவிருக்கிறது.

இவ்வருட முற்பகுதியில் புலிகளின் ஒலிபரப்பு சேவைக்கு உபகரணங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதி வழங்கியதிலிருந்து இச் சேவை கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டது. தற்போது கிளிநொச்சியிலிருந்து 60-70 கிலோமீற்றர் தூரத்திற்கு இவ் ஒளிபரப்பை கேட்கக்கூடியதாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (த-6)

# ஜனாதிபதியின் பதவிக்காலம் எதுவரை?

## அமைச்சரவையில் ஆராய பிரதமர் முடிவு

(கொழும்பு)

ஜனாதிபதி தொடர்ந்தும் இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாக கடந்த 2000நவம்பரில் இரகசியமாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட விடயத்தை உறுதிப்படுத்துவதற்கு ஜனாதிபதி அலுவலகம் மறுத்துள்ளது.

இதுபற்றிக் கருத்துத்தெரிவித்த ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரிம் பீரிஸ், இத்தகையதொரு நிகழ்வு நடைபெற்றதா என்பது பற்றி அப்போதைய ஜனாதிபதியின் செயலளார் எஸ்.கருணாரட்ணவிடம் தான் கேட்கவேண்டும் என்றும்,அவர் தற்போது வெளிநாடொன்றில் வசிக்கிறார் என்றும் தெரிவித்திருக்கிறார். கடந்த 2000வருடம் நவம்பர்11ந் திகதி அன்று பிரதம நீதியரசர் சரத் என். சில்வா முன்னிலையில் ஜனாதிபதி சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதாக கடந்த வாரம் செய்தி வெளியாகியிருந்தது.

அதேநேரம் 2000ஆம்ஆண்டில் இந்நிகழ்வு பற்றி எந்தவொரு உத்தியோகபூர்வ அறிக்கையும் வெளியிடப்படவில்லை. இச் சத்தியப்பிரமாணம் மூலம் திருமதி குமாரதுங்க எதிர்வரும் 2006ஆம் ஆண்டு முடியும் வரை தொடர்ந்தும் ஜனாதிபதியாக பதவி வகிக்கலாம் என்றே கூறப்படுகிறது. கடந்த 1999ல் அவர் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட உடனேயே நீதியரசரால் அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2005ஆம் ஆண்டு முடிவுவரை இப் பதவியை தொடர ஜனாதிபதி உரித்துடையவரா அல்லது அவர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டவுடன் செய்து கொண்ட பதவிப்பிரமாணப்படி 2005ஆம் ஆண்டு வரையுடனான 6வருடங்களுடன் அவரின் பதவிக்காலம் முடிவாக வேண்டுமா என்பது பற்றி அரசியலமைப்பு நிபுணர்கள் ஆலோசித்து வருகின்றனர். ஆனால் ஜனாதிபதியின் பதவிக்காலம் 2005உடன் நிறைவடைய வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு என ஐ.தே.மு. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. தற்போது விடப்பட்ட விடுமுறை காலத்தின் பின் மீண்டும் ஜனவரியில் நடைபெறவுள்ள கூட்டத்தின் போது இவ்விடயம் பற்றி பிரதமர் அமைச்சரவையுடன் கலந்துரையாடவுள்ளார் என்றும் இவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதியின் பதவிப் பிரமாண வைபவத்தில் கலந்துகொண்ட மற்றுமொரு நபர் அப்போதைய ஜனாதிபதியின் செயலாளர் குசும் சிறிபாலட்ட பென்டி என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த)

## இராசிபலன்

**30. 12. 2003**

**(மார்கழி 15, செவ்வாய்க்கிழமை)**

| | |
|---|---|
| சப்தமி | மு.ப.08.18 மணி வரை |
| உத்தரட்டாதி | பி.இ 12.47 மணிவரை |
| இராகுகாலம் | 03.29-04.59 மணிவரை |
| சுபநேரம் | 10.59-12.29மணிவரை |

**மேடம்**

தடைப்பட்ட காரியம் கைகூடும், நண்பர்கள் விரோதம், வீண் அலைச்சல், அதிகபிரயாசை.

**இடபம்**

இஷ்ட சித்தி, கௌரவ நிலை, தாழ்ந்த சுபாவம், பணத் தட்டுப்பாடு.

**மிதுனம்**

குடும்ப நன்மை, பொருள்சேர்க்கை, நல்ல செய்தி, ரோக நிலை.

**கடகம்**

மனச் சஞ்சலம், குடும்ப சுகம், கற்பனை மிகுதி, நண்பர்கள் சந்திப்பு.

**சிங்கம**

தேக நலன், தன இலாபம், நிலைமாற்றம், வீண் செலவு.

**கன்னி**

ரோக நிலை, வரவேற்பு, சுப செலவு, உடல் நலம், நிர்ப்பந்தம்.

**துலாம்**

விருந்துபசாரம், திடீர் பயணம், வாக்கு மேன்மை, பெரியோருதவி.

**விருச்சிகம்**

தெய்வ தரிசனம், மதிப்புக் குறைவு, மாதா நட்பு, பிதா சிந்தை.

**தனுசு**

வியாபார நன்மை, இனிய அனுபவம், நல்ல முயற்சி, பணவரவு.

**மகரம்**

ஆழ்ந்த சிந்தனை, கோபப்படுதல், பண விரயம், அதிகாரம்.

**கும்பம்**

ரோக பயம், புதிய திருப்பம், பாராட்டு, பிறர் உதவி.

**மீனம்**

சத்துரு ஜெயம், ஜனவசியம், பிரயாண நன்மை, செய்தொழில் விருத்தி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# 2004ஆம் ஆண்டில் முதலாம் தர மாணவர்களை வரவேற்க நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில், 2004 ஆம் ஆண்டு முதலாம் தரத்திற்கு சேர்த்துக் கொள்ளப்படவுள்ள மாணவர்களை வைபவரீதியாக வரவேற்பதற்கான ஒழுங்குகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இதுதொடர்பான சுற்றுநிருபம் ஒன்றை கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் டி. இந்திராணி காரியவாசம் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை , அரசாங்கப் பாடசாலைகளில 2004ஆம் கல்வி ஆண்டிற்கான முதலாம் தவணை எதிர் வரும் ஜனவரி மாதம் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதுடன் , அன்று முதல் 15ஆம் திகதிவரை பாடசாலைகளுககு புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளபபடவுள்ளனர்.

தொடர்ந்து ஜனவரி மாதம் 16ஆம திகதி சகலவலய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் புதிய மாணவாகளை வரவேற்கும் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. (த-61,10)

## மனைப்பொருளியல் பயிற்சி வகுப்பு

(வடலியடைப்பு)

தென்மராட்சி பிரதேச செயலக கிராமிய அபிவிருத்திப் பிரிவில் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் மனைப்பொருளியல் பயிற்சி வகுப்புக்கள் நடாததப்படவுள்ளன.எதிர்வரும் ஜனவரிமாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள இப் பயிற்சியில் கலந்து கொள்ளவென அப்பிரதேசத்தைச் சேர்ந்த 30பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (த-21)

# புலிகள் மாற்று வழியைத் தெரிவுசெய்ய ஜனாதிபதி அனுமதியளிக்கக் கூடாது

## கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு வேண்டுகோள்

(கொழும்பு)

இன்றைய முட்டுக்கட்டை நிலை ஜனாதிபதியால் உருவாக்கப்பட்டது.இந்நிலைக்கு அவரே தீாவுகாண வேண்டும். உடனடியாக ஒரு பொதுத்தேர்தல் நடைபெறுமாயின் ஜனாதிபதி தனது நிலையை அறியககூடியதாக இருக்கும். அமைச்சுக்களைப் பறித்தெடுத்ததற்கான தீர்ப்பை மக்கள் திருமதி குமாரதுங்கவிற்கு வழங்கக் காத்திருக்கிறார்கள். இதனால் மக்கள் முன்செல்வதற்கான வாய்ப்பை நாம் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறோம் என்று கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

எதிாவரும் மார்ச் மாதத்தில் நடைபெறக்கூடிய மாகாண சபைத் தேர்தல்களில் அவரது செயல்களுக்கு மக்கள் தீர்ப்பு வழங்குவார்கள். பாதுகாப்பு அமைச்சைக் கையாளும் திறமைகள் ஜனாதிபதிக்கு இல்லை. தலதாமாளிகை, மத்திய வங்கி, உலகவர்த்தக மையம் போனறவற்றை அவரால் பாதுகாக்க முடியாமல் போனது வரலாறு.

இன்று ஏற்பட்டிருக்கும் அரசியல் இழுபறிநிலை தேர்தல் ஒன்றின் மூலமே முடிவுக்கு வரமுடியும்.தேர்தல் ஒன்றில் தான் ஜனாதிபதி மக்களின் தீர்ப்பை அறியக்கூடியதாக இருக்கும். புலிகள் தமது யோசனைகளை முன் வைத்திருக்கிறார்கள். எமக்கு அவற்றுடன் முரண்பாடுகள் உண்டு. ஆனாலும் கொள்கையளவில் நாம் பேச்சுககளுக்கு தயாராகவே இருக்கிறோம். ஆனால நடைமுறையில் நாம் தயாரில்லாமலும் இருக்கிறோம். மிகவிரைவில் நாம் பேச்சுக்களுக்கு திரும்பவேண்டும். புலிகள் இரண்டாவது மாற்று வழியைத் தேர்ந்தெடுக்கும் வகையில் நாம் நடந்து கொண்டுள்ளோம்.

ஆனால் புலிகள் அந்தப் பேரழிவு தரும் மாற்று வழிக்கு உடனடியாகப் போவர்கள் என்று நாம் நினைக்கவில்லை. பேச்சுக்களை வெற்றிகரமாக நடத்தக் கூடியவர்கள் நாங்களே. .994 ல் பேச்சு நடத்திய திருமதி குமாரதுங்க தோல்வியடைந்தார். இப்பொழுது பிரதமரே பேச்சுக்களை தொடரவேண்டும் என்று அவர் கேட்டுவருகிறார். புலிகள் பேச்சுக்களிலிருந்து விலகிச் செல்லாதபடி பார்த்துக் கொள்ள வேண்டியது அவரது பொறுப்பாகும்.

சுதந்திரக்கட்சியும்,ஜே.வி.பியும் விரைவில் கூட்டணி அமைக்கக் கூடும். .ஜே.வி.பி. அதன் வளர்ச்சியில் உச்சக்கட்டத்திற்கு வந்துள்ளது இனிமேல் தனித்து வளர முடியாத நிலை அவர்களுக்கு. 1960 களில் சமசமாஜக் கட்சிக்கும் இதுவே பிரச்சினையாக இருந்தது. 10ஆசனங்களை மட்டுமே அவர்களால் வெல்ல முடிந்தது அதனால் சுதந்திரக்கட்சியுடன் இணைந்தனர். இப்பொழுது ஜே.வி.பி. கூட்டணியை அமைப்பதில் அக்கறையாயுள்ளது. பின்னர் சுதந்திரக் கட்சியின் ஆட்சிப்பீடத்தை அது தனது கைகளுக்குள் கொண்டு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றார். (த-6)

# பொலித்தீன் பாவனைக்கு முற்றாகத்தடை

(மருதங்கேணி)

எதிர்வரும் ஜனவரிமாதம் முதல் முல்லைத்தீவு மாவட்டத்தில் பொலிதீன் பாவனைக்கு தமிழீழ சுகாதார சேவை முற்றாகத் தடைவிதித்துளளது.

வர்த்தக நிலையங்களில் உணவுப் பொருட்களைப் பொதி செய்யவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத் தடையுத்தரவை மீறுவோர் மீது தமிழீழ சுகாதார சட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-35)

# "சார்க்" இன் வர்த்தக சம்மேளன தலைமைப் பதவி இலங்கைக்கு

(கொழும்பு)

சார்க் நாடுகளின் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் தலைமைப் பதவியை இலங்கை பெற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள சம்மேளனத்தின் மாநாட்டின் போது சார்க் நிர்மாண கைத்தொழில் சபையின் தற்போதைய தலைவர் மற்றின் காசிம் சம்மேளனத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படவுள்ளார்.

இம் மாநாட்டில் சார்க் பிராந்திய நாடுகளின் தற்போதைய பொருளாதார நிலைமை, உற்பத்தி அதிகரிப்பு மற்றும் பிராந்திய ஒத்துழைப்பை மேம்பாடு அடையச் செய்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் உட்பட பல தரப்பட்ட விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது. இம் மாநாட்டில் சார்க் பிராந்திய நாடுகளைச் சேர்ந்த 50 பிரபல வர்த்தகப் பிரமுகர்களும இந்நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். (த-60,10)

# ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதே பொதுஜன ஐக்கிய முன்னணியின் இலக்கு

## எதிர்க்கட்சித் தலைவர் சபதம்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறையை ரத்துச் செய்து பாராளுமன்றத்திற்குக் கூடுதலான அதிகாரங்களை வழங்குவதற்கான யோசனைக்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இணங்கிவருமானால் பொதுஜன ஐக்கிய முன்னணி அதற்குப் பூரணமான ஒத்துழைப்பை வழங்கும் என எதிர்க்கட்சித் தலைவா மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தங்காலையில் நேற்று முன்தினம் எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டமொனறில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி இணங்குமானால் அடுத்து வரவிருக்கும் பாராளுமன்றப் பொதுத்தேர்தலை முழு அதிகாரத்தையும் தன்னகத்தே கொண்ட பாராளுமன்றப் பொதுத்தேர்தலாக நடத்தமுடியும். தற்போது நிலவும் அரசியல் நெருக்கடி நிலைக்கும் இதுநல்லதொரு தீர்வாக அமைய முடியும்.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதே பொதுஜன ஐக்கிய முனனணியின் கொள்கையாகும்.

அரசியலில் சுயலாபம் தேடும நோக்கத்தைக் கைவிட்டு பொதுமக்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்யாமல் எந்த வகையான கூட்டமைப்புகளையும ஏற்படுத்துவதில் எவ்வித பலனும் இல்லை என்று மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## வருடாந்த ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயக் கல்வி அலுவலக ஊழியர் நலன்புரிச்சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடல் நாளை புதன் கிழமை மு.ப. 10.00மணிக்குயாழ். வலயப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் நா. வரதராஜா தலைமையில் யாழ். வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது . (த-18)

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில்

# 22 வயோதிபத் தம்பதிகளுக்கு இலவச பதிவுத் திருமணம்

(காரைநகர்)

காரைநகர் பிரதேசசெயலர் பிரிவில் திருமணமாகியும் இதுவரை பதிவுத்திருமணம் மேற்கொள்ளாத 22 வயோதிபத் தம்பதியினருக்கு இலவச பதிவுத்திருமணம் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த புதன்கிழமை காரைநகர் பிரதேச செயலர் அலுவலகத்தில், பிரதேச செயலர் முன்னிலையில் இந் நிகழ்வு இடம் பெற்றது.

இதில் யாழ்ப்பாண மேலதிக மாவட்டப் பதிவாளர் ந. சதாசிவ ஐயர் காரைநகர் பிரதேச பிறப்பு, இறப்புப் பதிவாளரும் திருமணப் பதிவாளருமான க. சோமசுந்தரம் ஆகியோர் இணைந்து பதிவுகளை மேற்கொண்டனர். (த-246)

# பாடசாலைப் புனரமைப்புக்கு உதவ எம்.பிக்களிடம் கோரிக்கை


யாழ்/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தை அபிவிருத்தி செய்வதற்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.சிவாஜிலிங்கம் மற்றும் வீ.ஆனந்தசங்கரி ஆகியோரிடம் நிதி உதவி கோரப்பட்டுள்ளது.

கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் பாதிப்படைந்த நிலையில் காணப்படும் மேற்படி பாடசாலையை அபிவிருத்தி செய்வதன் மூலம் அங்கு கல்விபயின்றுவரும் வறுமைக்கோட்டின் கீழ்உள்ள 300 மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்த முடியும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான 2004ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் ஒரு பகுதியை மேற்படி பாடசாலை அபிவிருத்திகளுக்கு ஒதுக்கிஉதவுமாறு கோரி பரஞ்சோதி வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கடந்த 27ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினருக்கு தனித்தனியே கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. (த-4)

# சமாதான நீதிவானாக நியமனம்

இந்து காலசார அமைச்சரின் சிபார்சின் பேரில் காரை நகர் களபூமியைச் சேர்ந்த சைவ நன்மணி பிரம்மஸ்ரீ கு.விவேகானந்தசர்ம அண்மையில் சமாதான நீதிவானாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.



இவர் களபூமி சுந்தர மூர்த்தி நாயனார் வித்தியாசாலை மற்றும் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவர் ஆவார். அத்துடன் மாவனல்லை ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் 40 ஆண்டுகளாகத் தொடர்ந்து பிரதம குருவாகப் பணியாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

கரவெட்டி வதிரியைச்சேர்ந்த ஓய்வு பெற்ற எழுதுவினைஞர் எஸ்.கே. இராசேந்திரன் அண்மையில் நீதியமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.



சிறந்த சமூக சேவையாளரான இவர், அல்வாய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராகவும் வதிரி தமிழ்மன்றம், வதிரி டயமண்ட் விளையாட்டுக்கழகம்,பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் மற்றும் வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபை ஆகியவற்றின் செயலாளராகவும் கட்டைவேலி நெல்லியடி ப.நோ. கூ. சங்கத்தின் இயக்குநராகவும் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உறுப்பினராகவும் சேவையாற்றியுள்ளார்.

# அரசு–புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்

## பேரியல் அஷ்ரப் வலியுறுத்து

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் வாழும் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல், சமாதான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச்செல்வது என்பது முடியாதவிடயம் என பராளுமன்ற உறுப்பினர் திருமதி பேரியல் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள ஊடகம் ஒன்றிற்கு கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இது பற்றிக் கூறுகையில்,

அரசிற்கும்- தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த ஆண்டு செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் குறித்து எவ்வித கருத்தும் குறிப்பிடப்படவில்லை.

இதனால் ,முஸ்லிம்கள் வாழும் பகுதி அரசாங்கத்திற்கு சொந்தமானதா? அல்லது விடுதலைப்புலிகளின் உடமையா? என்பது பற்றி எவ்வித தீர்மானங்களையும் மேற்கொள்ள முடியாத நிலையில் முஸ்லிம்கள் உள்ளனர்.

எனவே வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் உள்ளடக்கிய விதத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (த-60,10)

# கூட்டணியின் தென்மராட்சி கிளையை அமைக்க முடிவு

(மந்துவில்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தென்மராட்சிக் கிளையை அமைப்பதற்குப் பாராளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்காகத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்களுக்கு உறுப்புரிமை விண்ணப்பப்படிவம் வழங்கப்பட்டது. இதன் மூலம் உறுப்பினராக அங்கத்துவம் பெற்ற அனைவரையும் அழைத்து தென்மராட்சிக் கிளைக்கான நிர்வாகத் தெரிவை நடத்தவுள்ளதாக ரவிராஜ் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உறுப்புரிமை விண்ணப்பப்படிவம் கிடைக்கப் பெறாத கூட்டணி ஆதரவாளர்கள், அபிமானிகள் இருப்பின் "இராஜ அகம்" இல-11, இராமலிங்கம் வீதி, சாவகச்சேரி என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (த-54)

# மிதிவெடிகளை அகற்ற இலகுவாக படைத்தரப்பு வரைபடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் புதைக்கப் பட்டுள்ள மிதிவெடிகள் சம்பந்தமான 3ஆயிரம் விளக்க வரை படங்களைப் படையினர் யாழ். மாவட்ட மிதிவெடிகள் அகற்றும் செயற்பாடடு அலுவலகத்திடம் கையளித்துள்ளனர்.

2004ஆம் ஆண்டில் யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ள மிதிவெடி அகற்றும் நடவடிக்கைகளை துரிதமாகவும் இலகுவாகவும் வெடி விபத்துக்கள் அற்ற முறையிலும் மேற்கொள்வதற்காக யாழ். செயலகத்தில் இயங்கிவரும் மிதிவெடிகள் அகற்றும் செயற்பாட்டு அலுவலகம் படைத்தரப்பினரது மிதிவெடி புதைப்பு தொடர்பான வரைபடங்களை தந்துதவுமாறு கோரியிருந்தது.

இதற்கு அமைவாக மிதிவெடிகள் புதைப்புச் சம்பந்தமான 3 ஆயிரம் விளக்க வரைபடங்களை கடந்த வாரம் படைத்தரப்பு ஒப்படைத்துள்ளது.

இதனால் மிதிவெடி அகற்கும் நடவடிக்கைகள் 2004 ஆண்டில் துரிதமாக மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (த-4)

# வயிற்றுப் போக்கிலிருந்து குழந்தையை காப்பாற்றுவதற்கு சில ஆலோசனைகள்

## மருத்துவ விளக்கம்

டாக்டர் C.குணசேகரன்

பூவாகி, காயாகி, கனிந்து உலகத்திற்குப் பலன்தர வேண்டிய இளஞ்சிறார்கள், மொட்டிலேயே கருகி வீழ்வதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று வயிற்றுப்போக்கு நோயாகும்.

சிலர் போலி மருத்துவர்களிடம் (Quacks) சென்று தொக்கம் எடுத்தல் - சொருகல் எடுத்தல், உச்சிக்குழியில் 'சீர்' (பச்சிலை) பூசுதல், குடற்சொருகல் என்று வயிறு தட்டுதல் இப்படி பல ஏமாற்று சிகிச்சைக்கு ஆளாகி பொருளையும் சில சமயங்களில் குழந்தையையும் இழக்கின்றனர்

வயிற்றுப்போக்கு நேரங்களில் வாய் வழியே உணவு மற்றும் எந்தத் திரவங்களையும் தராமல் பட்டினி போட்டு அதிக நீரிழப் பால் குழந்தை மிகவும் சோர்வுற்ற நிலையில் மருத்துவர்களை, மருத்துவமனையை நாடுகின்றனர்.

சிலர் சரியான நேரத்தில் மருததுவப் பணியாளர்கள் மற்றும் மருத்துவர்களை அணு[illegible]னாலும் - இவர்களில் சிலரும் இந்நோய்க்கு ஓ.ஆர்.எஸ் (ORS) என்கிற முக்கிய மருந்து என்பதை அலட்சியப் படுத்துவது கசப்பான உண்மையாகும். ஓ.ஆர்.எஸ். திரவம் (Oral Rehydration Solution) இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற விஞ்ஞானக் கண்டுபிடிப்பென்று உலக சுகாதார நிறுவனம் (World Health Organisation) பரிந்துரைக்கின்ற உயிர்காக்கும் மருந்துக் கலவையை பலரும் பயன்படுத்த மறக்கின்றனர்; சிலர் மறுக்கின்றனர்.

மாறாக, உலக சுகாதார நிறுவனம மற்றும் லோபரமைடு (Lope ramide) பெக்டின் - கயோலின் (Pectin-Kaolin) போன்ற மருந்துகளையும் தேவையின்றி உயிர்க்கொல்லி (Antibotics), வாந்தி நிறுத்தும் மருந்துகள் (Anti-Em etics) மற்றும் கூட்டு மருந்துகள் (Metronidazoli+Nalidixic Acid) போன்றவற்றைப் பயன்படுத்தி வீண் செலவுகள் சில சமயங்களில் குழந்தைகளுக்குக் கெடுதலையும் ஏற்படுத்துவதை மருத்துவர்கள் இனி தவிர்க்க வேண்டும். இப்படிச் செய்தால் தான் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள என்று வியாபார தந்திரம், நம் தொண்டாந்த மருத்துவத் துறைக்கும பரவவிடக் கூடாது.

### வயிற்றுப்போக்கு என்பது என்ன?

தண்ணீராக மலம் போவதை வயிற்றுப்போக்கு எனலாம். இது ஒரு நாளைக்கு ஒரிரு தடவையோ அல்லது பலமுறைக்கு மேல் ஏற்படலாம். எத்தனை தடவை என்பதை விட மலத்தின் நிறம் தன்மையில் ஏற்படும் மாற்றம் முக்கியமாகும்.

### வயிற்றுப்போக்கின் வகைகள்

தீவிர வயிற்றுப்போக்கு (Acute Diarrhoea): திடீரென ஆரம்பித்து, பொதுவாக 3, 7 நாட்கள் வரை இருக்கும். ஆனால் 14 நாட்களுக்குள் வயிற்றுப்போக்கு கட்டுப்பட்டு விடும்.

சீதபேதி (Dysentery): சீதங் கலந்தோ அல்லது இல்லாமலோ மலத்துடன் இரத்தம் வெளியேறுவது.


நாள்பட்ட வயிற்றுப் போக்கு (Chronic Diarrohoea): 14 நாட்களுக்கு மேல் தொடரும் வயிற்றுப் போக்கு.

### வயிற்றுப்போக்கு ஏன் அபாயகரமானது?

வயிற்றுப் போக்கினால் மரணம் ஏற்படலாம். ஊட்டச்சத்து குறைவும் ஏற்படலாம்.

வயிற்றுப்போக்கின்போது மலதததில் நீர், சோடியம் - பொட்டாசியம் குளோரைடு உப்புச்சத்துக் கள் மற்றும் பை கார்பனேட் வெளியேறுகின்றன. இந்த இழப்புகள் போதிய அளவில் ஈடுசெய்யப் படாவிடில் இறப்பு ஏற்படும்.

வயிற்றுப் போக்கின் போது உணவுச் சத்துக்கள் இழப்பும் இருக்கும். குழந்தைக்கு சாப்பிடுவதில் விருப்பம் இருக்காது. தாய்மார்களில் பெரும்பாலோர் தவறாக, உணவு கொடுப்பதைக் குறைத்தோ அல்லது நிறுத்தியோ விடுகின்றனர். இதனால் ஊட்டச்சத்து குறைவும் ஏற்படுகின்றது.



### வயிற்றுப்போக்கின் முடிவு

90 வீதம் - வயிற்றுப் போக்கில் பாதிக்கப்பட்டாலும் குழந்தைகளுக்கு ஆரம்பத்தில் நீரிழப்பு நிலை (Dehydration) ஏற்படுவதில்லை. வீட்டில் இருக்கும் திரவம் மற்றும் உணவை தொடர்ந்து கொடுப்பதன் மூலம் வீட்டிலேயே இவற்றை சமாளிக்கலாம்.

9 வீதம் - குழந்தைகளுக்கு நீரிழப்பு நிலை ஏற்படலாம். அவர்களுக்கு மருத்துவ அறிவுரையின் படி ஓ.ஆர்.எஸ். திரவ சிகிச்சை அளித்தல் வேண்டும்.

நூற்றில் ஒரு குழந்தைக்கு அதிக அளவு நீரிழப்பு (Seve re dehydration) ஏற்பட்டு, சிரை வழி (Intravenous) நீரேற்றும் நிலை ஏற்படும்.

### நீரிழப்பைத் தவிர்க்க

நீரிழப்பு நிலை வராமல் தடுப்பதற்கு தொடர்ந்து திரவ ஆகாரம் அதிகம் அருந்தச் செய்தல், அரிசிக் கஞ்சி, மோர், பருப்புநீர், இளநீர், தக்காளிஜூஸ், தண்ணீர் ஆகிய எளிதில் கிடைக்கும் தி[illegible]வத்தை அதிக அளவில் புகட்ட வேண்டும. எக்காரணங் கொண்டும் திரவம் கொடுப்பதை நிறுத்தி விடக கூடாது.

தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் தொடரவும். வேறுபால் குடித்தல் (பசும்பால், டின்பால்) அதனையும் தொடரலாம். பெரிய குழந்தைகட்கு எளிதில் ஜீரணிக்கக் கூடிய உணவை (அரிசி, கோதுமை, ரவை, சோளம் போன்றவற்றின் கூழாக்கிய உணவு. வேக வைத்து மசித்த பருப்பு வகைகள், மசித்த கிழங்குவகை கள் கொஞ்சம் கொஞ்சமாக கொடுக்க வேண்டும். வயிற்றுப் போக்கு நின்ற பிறகும் சில நாட்களுக்கு கூடுதல் உணவு கொடுக்க வேண்டும். □

---

# கடந்த 11 மாதங்களில் போசனைக் குறைவால் 25 சிசுக்கள் தெல்லிப்பழை சுகாதாரப் பிரிவில் இறப்பு

(சுதுமலை)

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இந்த வருடம் முதல் 11 மாதங்களில் மட்டும் ஒரு வயதிற்குட்பட்ட 25 சிசுக்கள் மரணமடைந்துள்ளதாக தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் நவமலர் கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

ஏழாலையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் வைத்திய அதிகாரி உரை நிகழ்த்தும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

சிசு மரணங்கள், ஏற்படுவதற்குப் போசாக்கின்மையும், இளவயதுத் திருமணங்களுமே பிரதான காரணங்களாக அமைந்துள்ளன. எனவே, கர்ப்பகாலத்தில் ஒரு தாயின் போசாக்கு மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்படுதல் அவசியமாகின்றது.

மேலும், போசாக்கின்மை காரணமாக மிகவும் நிறைகுறைவான பிள்ளைகளே பிறக்கின்றன. அத்துடன் இரட்டைப் பிள்ளைகளைப் பிரசவிக்கும்போதும் நிறைகுறைவாகப் பிறக்கும் குழந்தைகள் இறந்துவிடுகின்றன.

கர்ப்பவதிகளின் போசாக்கை மேம்படுத்துவதற்கு என சுகாதார ரத்[illegible]களத்தினால் சோயா [illegible]பைக்கற்றுகள், திரிபோஷாமா மற்றும் அயன், விட்டமின் குளிசைகள் வழங்கப்பட்டு வருவதுடன், போஷாக்கு உணவு பற்றிய ஆலோசனைகளும் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்டு வருவதாகக் கூறினார். (த-252)

---

# பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட ஈரானுக்கு இலங்கை உதவி

(கொழும்பு)

கடந்த வெள்ளியன்று ஈரானில் இடம்பெற்ற பூகம்பததால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கையும் அவசர உதவிகளை வழங்கியிருக்கிறது.

இதன் முதற்கட்டமாக தேயிலையும் சேர்த்து வழங்கப்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் போர்னாட் குணதிலக தெரிவித்தார். மேலும், இப் பூகம்பத்தால் இலங்கையர் எவரும் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்பது குறித்துத் தாம் ஆராய்ந்து வருவதாக தெஹ்ரானிலுள்ள இலங்கைத் தூதுவர் கூறினார்.

மேற்படி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஈரானிய மக்களுக்கும் அரசிற்கும் தமது ஆழ்ந்த அனுதாபச் செய்தியை ஜனாதிபதி நேற்று முன்தினம் அனுப்பிவைத்திருக்கிறார். (த-6)

---

# தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்தி புறக்கணிக்கப்பட்டு வருகிறது

## மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கை அரசியல்வாதிகளால் தமிழர்கள் வெறும் அரசியல் பகடைக்காய்களாக மட்டுமே நடாத்தப்படுவதால் தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்திப் பணிகள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் அ.பரமநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற "சமாதானச் செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்பு" என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் கருத்துரை வழங்கியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மகளிர் அபிவிருத்தி நிலையமும், சுதந்தரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டு நிறுவனமும் இணைந்து நடத்திய இக் கருத்தரங்கில்,

மகளிர் அபிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன், பெண்கள் மனித உரிமைகள் இணைப்பாளர் மாலினி திஸநாயக்க, இவ் அமைப்பின் யாழ். மாவட்ட இணைப்பாளர் வி. நிர்மானுஷன் ஆகியோர் உட்படப் பல மகளிர் அமைப்புக்களையும் சேர்ந்த தென்னிலங்கை மற்றும் யாழ். மாவட்டப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

தமிழ் மக்களுக்கான பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்து, போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்வது எனக் கூறி, ஆட்சிக்கு வநத தற்போதைய அரசாங்கம்,

அதனை மறந்து தனது அரசியல் இலாபத்தை மட்டுமே கருத்தில் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

இதனால் தமிழ் மக்களுக்கான பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப் படவில்லை. மாறாக இராணுவப் பாதுகாப்பு வலயம், சோதனைக் கெடுபிடி என பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றது எனக் கூறினார். (த-4,16)

---


அன்பு வாசகர்களே!

உங்கள் வலம்புரி யில்

**01.01.2004 முதல் எதிர்பாருங்கள்**

2003இல் நடந்த முக்கிய நிகழ்வுகள் அடங்கிய தொகுப்பு

அழகிய புகைப்படப் பதிவுகளுடன்

காலத்தின் பதிவுகளை நீங்கள் ஆவணப்படுத்த அரியதோர் சந்தர்ப்பம்

உங்கள் வலம்புரியை வாங்க - வாசிக்கத் தவறாதீர்கள்

## இடைநிறுத்தம்

2003 ஆம் ஆண்டுக்குரிய கணக்குகளை உரிய திகதியில் முடிவுறுத்த் வேண்டியுள்ளதால் மோட்டார் வாகன வரிகள், வாகன உடமை மாற்றல் கட்டணங்கள் மற்றும் ஏனைய பெறுவனவுகள் யாவும் கடந்த 26ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டு மீண்டும் எதிர்வரும் 2ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என் வலி. மேற்குப் பிரதேச செயலர் சி.ஏ. மோகன்ராஜ் அறிவித்துள்ளார்.

அதேவேளை, அரசாங்க சேவை ஆட்சேர்ப்புப் பரீட்சைக் கட்டணங்கள் மட்டும் நாளை புதன்கிழமை மதியம் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (த-70)

## மஹோற்சவம்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஏகாதசி மஹோற்சவம் கடந்த 26ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 3ஆம் திகதி காலை 6 மணியளவில் சுவர்க்கவாசல் திருவிழாவும் தொடர்ந்து மு.ப. 11.00 மணியளவில் தேர்த்திருவிழாவும், அன்றைய தினம் இரவு முழுவதும விசேட பூஜை வழிபாடுகளும் நடைபெறும்.

மறுநாள் காலை 8.00 மணியளவில் தீர்த்தம் இடம்பெறும்.(த-70)

# தமிழர்கள் ஒன்றுபடும் சூழ்நிலையை ஏற்படுத்தியவர்கள் பேரினவாதிகளே

## கொழும்பு மாவட்ட எம்.பி. மனோகணேசன் செவ்வி

(கொழும்பு)

இலங்கையில் பாரிய அரசியல் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ள போதும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மேல் மாகாண மக்கள் முன்னணித் தலைவருமான மனோகணேசன் இலங்கை வானொலியின் தேசிய சேவைக்கு வழங்கிய விசேட செவ்வியில் தெரிவித்துள்ளார்.

செவ்வியின் விபரம் வருமாறு,

கேள்வி:- ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்றுள்ளமையையடுத்து தென்னிலங்கையில் பாரிய அரசியல் நெருக்கடிநிலை உருவாகியிருக்கின்றது. ஜனாதிபதியின் இச் செயற்பாட்டைக் காரணம் காட்டி பிரதமர் சமாதான நடவடிக்கைகளைக் கைவிட்டுள்ளார். ஜனாதிபதியே சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அவ்வாறு இல்லையானால் பொறுப்பேற்கப்பட்ட அமைச்சுக்களை மீள ஒப்படைக்கவேண்டும் எனப் பிரதமர் கோருகின்றார். ஜனாதிபதியோ, பிரதமரின் இந்த வேண்டுகோளைச் செவிமடுப்பதாகத் தெரியவில்லை. அதேநேரம், சமாதான நடவடிக்கைகளைத் தானே முன்னெடுத் துச் செல்லவேண்டும் என்ற எண் ணமும் பிரதமருக்கு இல்லை. இதனால், சமாதான நடவடிக்கை கள் மீண்டும் தொடருமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இதுபற்றித் தங்களின் கருத்து என்ன?

***பதில்:- இலங்கையின் இனப் பிரச்சினை விவகாரம் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குத் திரும்பியுள்ளது. அதாவது, சர்வதேச நாடுகளின் நிதி உதவியைப் பெற்றுள்ள இலங்கை, அந்நாடுகளின் நிர்ப்பந்தத்திற்குக் கட்டுப்படவேண் டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது.***

***பல நாடுகளும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுமாறு பிரதமரையும் ஜனாதிபதியையும் நிர்ப்பந்தித்து வருவதுடன், சமாதான நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படாத விடத்தில் தாம் இலங்கைக்கு வழங்கவிருக்கும் நிதியுதவிகள் கிடைக்காமல் போய்விடும் எனவும் அவை எச்சரித்துள்ளன. எனவே, இவர்கள் இருவரில் எவராவது, சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்ற நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.***

கேள்வி:- இலங்கையில் வாழும் தமிழ்பேசும் மக்களின் பொதுவான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு மலையக மக்கள் முன்னணி, இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணி உள்ளிட்ட அனைத்துத் தமிழ்க் க்கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படப் போவதாகச் செய்திகள் வெளியாகி வருகின்றது. அது உண்மையா?

***பதில்:- ஆம். அது உண்மை தான். பொதுவான பிரச்சினைகளில நாம் ஒன்றுபட்டு ஒரேஅணியில் நின்று செயற்படவுள்ளோம். அதுபற்றி நாங்கள் விரைவில் சகல தமிழ்க் கட்சிகளுடன் பேசவுள்ளோம்.***

***தமிழர்களின் உரிமைகளைப் பெறுவதற்கு அவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு அனைத்துத் தமிழ்க்கட்சிகளும் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டிய காலம் தற்போது உருவாகியிருக்கின்றமையினால் இச் செயற்பாடு மிகமிக அவசியமாகின்றது. அத்துடன், தமிழர்கள் அனைவரும் ஒன்றுபடவேண்டிய சூழ்நிலையைப் பேரினவாதிகளே ஏற்படுத்திவிட்டார்கள் என்பது இங்கு மிக முக்கியமாகக் கூறிவைக்கவேண்டிய விடயமாகும்.***

கேள்வி:- தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்போவதாகக் கூறியிருக்கின்றீர்கள். அப்படியானால் அந்தக் கட்சியில் முஸ்லிம் கட்சிகளும் அடங்குகின்றனவா? அவர்களின் அபிலாஷைகள் மற்றும் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு அக்கட்சிகளுடன் நீங்கள் இணைந்து செயற்படுவீர்களா?

***பதில்:- நிச்சயமாக நாம் தமிழ் பேசும் அனைத்து மக்களினதும் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும், அவர்களது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கும் நாம் இணைந்து செயற்பட்டு வெற்றி காண முயலுவோம்.***

கேள்வி:- தென்னிலங்கையில் அதிலும் குறிப்பாகத் தமிழர்கள் செறிந்து வாழும் கொழும்பு மாவட்டத்தில் பேரினவாதிகள் தமிழர்களைக் கொலை செய்வதுடன் நின்றுவிடாது, தமிழர்களின் தாய் மொழியாகிய தமிழ் மொழியைக் கூடக் கொன்றுவிடுகின்றார்கள். இதனைக் கொழும்பிலுள்ள வீதிகள் மற்றும் அலுவலகங்களில் உள்ள விளம்பரப் பலகைகளில் அவதானிக்கலாம். எனவே இந்நிலையை மாற்றுவதற்குக் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்போகின்றீர்கள்?

***பதில்:- இத்தகைய நிலை உருவாகுவதற்கு முக்கிய காரணம் என்னவென்றால், கொழும்பு மாவட்டத்தில் உள்ள அரச அலுவலகங்களில் பணியாற்றும் பல அதிகாரிகளுக்குத் தமிழ் தெரியாது. சிங்கள இனத்தவர்களே அங்கு அதிகாரிகளாகக் கடமையாற்றுகின்றார் கள்.***

***எனவே, இந்நிலையைத்தவிர்ப்பதற்கு தமிழ்மொழியை நிர்வாக மொழியாக மாற்ற உடன் நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மற்றும் ஜனாதிபதியிடம் கோரவுள்ளேன். இதேவேளை, ஜனாதிபதி தமிழ் மொழியை நிர்வாக மொழியாக மாற்றுமாறு ஏற்கனவே உத்தரவிட்ட போதும் அது இதுவரை அமுல் படுத்தப்படவில்லை என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.***

கேள்வி:- நாட்டில் தமிழ்மொழி மூல கல்விக் கொள்கை ஒன்றை உருவாககினால் மொழிப்பிரச்சினை எதுவும் ஏற்படாது எனப் பல கல்விமான்கள் வலியுறுத்தி வருகின்றமையால் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராகிய நீங்கள் உங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி இது விடயத்தில் ஏதாவது நடவடிக்கை எடுக்க முயற்சி செய்வீர்களா?

***பதில்:- ஆம். இது விடயத்தில் நான் மிகுந்த அக்கறையாகவுள்ளேன். முதல்கட்டமாக ஜனவரி மாதம் 8ஆம் திகதி பாராளுமன்றம் கூடவிருக்கின்றது. அதற்கு முன்னராக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து இதுபற்றி விரிவாகக் கலந்தாலோசிக்கவுள்ளேன்.***

***கல்விசார்ந்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்றை அமைப்பதற்கு இலங்கைத் தமிழாசிரியர் சங்கமும் சில ஆலோசனைகளை வழங்கியுள்ளது.***

***எனவே, இந்த ஆலோசனைகளை வைத்து கல்விசார்ந்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்றை அமைத்து அதுபற்றி அரசாங்கத்துடன் பேசுவதற்குத் தீர்மானிதுள்ளேன் என்றார். (த-60,10)***

# சுகாதார ஊழியர் வேலைநிறுத்த காலத்தில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

(கொழும்பு)

அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றிவரும் சுகாதார ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவார்களாயின் அக்காலப்பகுதியில் மககளுக்குச் சீரான சேவையை வழங்கும் வகையில், அந்த வெற்றிடங்களுக்கு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் நியமிக்கப்படுவர்.

இவ்வாறு உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சர் அலிக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

றத்தோட்டை நகர மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றிவரும் சுகாதார ஊழியர்கள் கடந்த காலங்களில் மேற்கொணட வேலைநிறுத்தப் போராட்டங்களினால் அக்காலப்பகுதியில் மக்கள் சீரான சுகாதார சேவையைப் பெறமுடியாது பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

எனவே, மக்களின் நலன் கருதி சுகாதார ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடும் காலங்களில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப பரீட்சையில் சித்தியடைந்தவர்களை அப்பணியில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார். (த-60,10)

# இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களுக்கு பாடசாலைகள் ஒதுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட வலயங்களுக்கிடையில் இடமாற்றம் பெறும் ஆசிரியர்களுக்கான பாடசாலைகள் அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்களினால் வழங்கப்பட்டுள்ளது.

அவர்களின் விபரம் வருமாறு:-

| ஆசிரியரின் பெயரும் பாடசாலையும் | இடமாற்றப்படும் பாடசாலை |
|---|---|
| திரு. மா.கருணாநிதி - யா/விக்ரோறியாக் கல்லூரி | யா/கொக்குவில் இந்துக் கல்லூரி |
| திருமதி நி.சந்திரகுமார் - யா/மூளாய் சைவப்பிரகாச வித்தி. | யா/நல்லூர் இ.த.பெ.பாட. |
| திருமதி லோ.சிறிகாந்தன் - யா/வயாவிளான் ம.ம.வி. | யா/கோப்பாய் வடக்கு றோ.க. |
| திரு.ஜெ.குமாரதேவன் - யா/மகாஜனக் கல்லூரி | யா/கோண்டாவில் இ.ம.வி. |
| திருமதி ப.சந்திரகாசன் - யா/நாவற்குழி ம.வி. | யா/கோண்டாவில் இந்து ம.வி. |
| திருமதி தி.சண்முகலிங்கம் - யா/கைதடி குருசாமி வித்தி. | யா/திருநெல்வேலி இ.த.க.பா. |
| திரு. கா.குமரபரன் - யா/விடத்தற்பளை கமலாசினி வித்தி. | யா/நல்லூரி காசிப்பிள்ளை வி. |
| திரு.வே.அன்பழகன் - யா/கைதடி நாவற்குழி அ.த.க.பா. | யா/இந்து ஆரம்பப் பாட. |
| திருமதி ஞா.அரியரட்ணம் - யா/வடஇந்துமகளிர் கல். | யா/சன்மார்க்க ம.வி. |
| திருமதி சு.சண்முகலிங்கம் - யா/கட்டைவேலியாக்கரு விநாயகர் | யா/நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாட. |
| திரு.அ.சடாட்சரலிங்கம் - யா/கெருடாவில் இ.த.க.பா. | யா/அத்தியார் இந்துக் கல்லூரி |
| திரு.எ.லு.புவீராசசிங்கம் - யா/புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தி. | யா/புனித ஜேம்ஸ் மகளிர் பாட. |
| திரு.இ.குபேந்திரதாஸ் - யா/வேலணை தெற்கு ஐயனார் | யா/திருநெல்வேலி இ.த.க. |
| திருமதி வி.சிவகுமாரன் - யா/வேலணை தெற்கு ஐயனார் | யா/ஆனைப்பந்தி மெ.மி.த. |
| திருமதி அ.விமலன் - யா/வேலணை சைவப்பிரகாச | யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தி. |
| திரு.த.முத்துலிங்கம் - யா/மண்டைதீவு வித்தி. | யா/புனித ஜேம்ஸ் ஆண்கள் பாட. |
| திரு.இ.தபானந்தன் - யா/மண்டைதீவு ம.வித்தி. | யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாட. |
| செல்வி மை.மார்க்கண்டு - யா/கலாநிதி ஆ.தியாகராஜ | யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாட. |
| திருமதி நா.சுகிர்தலிங்கம் - யா/தம்பாட்டி அ.த.க. | யா/கொழும்புத்துறை துரையப்பா |
| திரு.வ.மகேந்திரராஜா - யா/தம்பாட்டி அ.த.க. பாட. | யா/ஒஸ்மானியாக் கல்லூரி |
| திருமதி மே.ஜே.ஜெபராஜா - யா/வைத்திலிங்கம் துரைசாமி வி. | யா/வைத்தீஸ்வராக் கல்லூரி. |
| திருமதி பி.பாரநிதாச்ன் - யா/ஊர்.புனித அந்தோனியார் வித்தி. | யா/புனித ஜேம்ஸ் மகளிர் பாட. |
| திருமதி சு.பி.தேவகிருபாகரன் - யா/யாழ்ற்றன் கல்லூரி | யா/திருக்குடும்பக் கன்னியர்மடம் |
| திருமதி ம.தவராஜா - யா/நாரந்தனை றோ.க. | யா/இந்து மகளிர் ஆரம்பப் பாட. |
| திருமதி கு.இராஜேந்திரன் - யா/நாரந்தனை றோ.க. | யா/நல்லூர் இந்து த.பெண்கள் பாட. |
| திரு.சு.பரமேஸ்வரன் - யா/புங்குடுதீவு ம.வித்தி. | யா/கொக்குவில் இந்துக் கல்லூரி |
| திருமதி ம.கணானந்தன் - யா/புங்குடுதீவு ம.வித்தி. | யா/நல்லூர் தெற்கு விக்னேஸ்வர |
| திருமதி யோ.திரவியநாதன் - யா/நயினாதீவு கணேச வித்தி. | யா/வைத்தீஸ்வராக் கல்லூரி. |
| திரு.நா.கிருபானந்தசிவம் - யா/செட்டிபுலம் அ.த.க. | யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி. |
| திருமதி க.முரளி - யா/அனலைதீவு சதாசிவ ம.வி. | யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி. |
| திரு.இ.ரவீந்திரன் - யா/ஊர்.புனித மரியாள் | யா/கொக்குவில் இந்துக் கல்லூரி |
| திரு.ஐ.தயாபரன் - யா/நாரந்தனை கணேச வித்தி | யா/மத்திய கல்லூரி |
| திருமதி யோ.சபாநாதன் - யா/வேலணை ஆத்திசூடி | யா/கோண்டாவில் இ.ம.வி. |
| திருமதி ப.அரசரத்தினம் - யா/நெடுந்தீவு ம.வி. | யா/முத்துத்தம்பி ம.வி. |

(ந-3,7)

# வெளிநாட்டில் பணிபுரிவோருக்கு "சிரமநிவாரணம்" மூலம் உதவி

(கொழும்பு)

வெளிநாடுகளுக்குத் தொழில் வாய்ப்புப் பெற்றுச் செல்பவர்களின் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு "சிரம நிவார்ணம்" என்ற புதிய திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக வெளிநாடுகளில் தொழில் புரிவோரின் நலன்புரி அமைச்சர் லக்ஷ்மன் யாப்ப அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் முதற்கட்டமாக அநுராதபுரம், பொலநறுவை ஆகிய மாவட்டங்களில் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும், பின்னர் படிப்படியாக ஏனைய மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக வும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, வெளிநாடுகளுக்கு தொழில்வாய்ப்புப் பெற்றுச் செல்லும் பெண்கள் அங்குள்ள தொழில் முகவர்கள் மற்றும் எஜமானிகளால் துன்புறுத்தப்பட்டும் ஒழுங்காக அவர்களுக்கான சம்பளங்கள் கொடுக்கப்படர்மலும் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டு வருகின்றமை தெரிந்ததே. (த-61,10)

# அனைத்துக் கூட்டணிக் கட்சிகளையும் அரவணைத்துச் செல்ல பா.ஜ.க. விருப்பம்

## வெங்கைய நாயுடு தெரிவிப்பு

(புதுடில்லி)

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள எந்தக் கட்சியையும் விட்டுவிட பாரதிய ஜனதாக் கட்சி விரும்பவில்லை; அனைத்துக் கூட்டணிககட்சிகளையும் அரவணைத்துச் செல்லவே பா.ஜ.க. விரும்புகிறது என்று கட்சித்தலைவர் வெங்கைய நாயுடு கூறியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் எந்தக்கட்சியாவது கூட்டணியைவிட்டு விலகவிரும்பினால் அது சொந்தக் காரணங்களுக்காக அவர்கள் எடுக்கும் முடிவு என்று கூறினார்.

வரவிருக்கும் மக்களவைத்தேர்தலில் பிரதமர் பதவிக்கான வேட்பாளரை அறிவிக்கப் போவதில்லை என்று காங்கிரஸ் முடிவெடுத்திருப்பது கட்சித் தலைவி சோனியா காந்தியை பிரதமராக ஏற்க மற்றக் கட்சிகள் தயாராக இல்லை என்பதையே தெளிவுபடுத்துவதாக வெங்கைய நாயுடு கூறினார்.

தன்னம்பிக்கையையும் நம்பகத்தன்மையையும் இழந்துவிட்டதாலேயே காங்கிரஸுக்கு தனது தலைவரை அறிவிக்கும் துணிவு இல்லை என்றும் நாயுடு கூறினார்.

தனித்து ஆட்சி அமைப்போம் என்று கூறியிருந்த காங்கிரஸ் கட்சி இப்போது கூட்டணிககு அழைப்பு விடுத்திருப்பது கட்சியின் பலவீனததையே காட்டுகின்றது என அவர் மேலும் கூறினார். (து-9)



மலேசியா கோலாலம்பூரில் உள்ள உலகின் மிக உயரமான பெட்ரானஸ் கட்டடத்தின் 88-வது மாடியிலிருந்து (1483 அடி) குதித்து, சிறிது நேரம் கழித்து பரசூட் விரிக்கும் போட்டியில் ஹங்கேரியின் தாமஸ் ஷிடோழ்க்செவ். இவரைப் போல் ஆசிய, ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த 52 பேர் பங்குபற்றியுள்ளனர்.



ஆந்திராவில் மிக உயரமான (7.5 அடி) மனிதராகக் கருதப்படும் கத்தய்யா

## பா.ஜ.க. முன்னாள் தலைவர் காலமானார்

(புதுடில்லி)

பாரதிய ஜனதாக் கட்சியின் முன்னாள் மூத்த தலைவர் குஷாபாவ் தாக்கரே மாரடைப்புக்காரணமாக நேற்று முன்தினம் காலமானார்.

இவரது உடல் டில்லியில் இருந்து வேப்பாலிற்கு கொண்டு செல்லப்பட்டது.

மக்கள் அஞ்சலி செலுத்துவதர்காக வேப்பாலில் கட்சி அலுவலகததில இவரது உடல் வைக்கப்பட்டுள்ளது.(து-9)



ஈராக்கில் சர்வாதிகார ஆட்சி நடந்தி வந்த சதாம் ஹூசேனை அமெரிக்கப் படைகள் சிறைபிடித்தனர். சதாமுக்கு எதிரான பொதுமக்கள் பாக்தத்தில் உள்ள அவரது உருவச் சிலையை தாக்கி, தங்களின் கோபத்தை வெளிப்படுத்தினர்.

## உத்திரப் பிரதேசத்தில் நிலவிவரும் கடும் குளிர் காரணமாக 20பேர் பலி

(லக்னோ)

உத்திரப் பிரதேச மாநிலத்தில் நிலவிவரும் கடும் குளிர் காரணமாக 20பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் அனைவரும் வறுமையில் வாடுபவர்கள் எனவும இவர்கள் தங்குமிட வசதிகளின்றி வீதியோரங்களிலேயே காலத்தைக் கழித்தவர்கள் என்றும இந்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வருடாந்தம் கடும்குளிர் காரணமாக உத்திரப் பிரதேசத்தில் பலா உயிரிழப்பது வழக்கம் என ரொயிட்டர்செய்தி கூறுகின்றது. (து-9)

## மத்திய அரசில் இருந்து விலக ம.தி.மு.க. அமைச்சர்கள் தயார்

### கண்ணப்பன் அறிவிப்பு

(புதுடில்லி)

மத்திய அரசிலிருந்து விலககுவதற்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக அமைச்சர்கள் தயாராக இருப்பதாக அக்கட்சியின் பொருளாளரும் மத்திய அமைச்சருமான கண்ணப்பன் தெரிவித்துள்ளார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக நிர்வாகிகள் இது தொடர்பாக வேலூர்சிறையில் வை.கோபாலசாமியை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது வை.போபாலசாமி தனது நிலைப்பாட்டை விளக்கியதாகவும்,

அதுகுறித்து நேற்று ஆராய்ந்துள்ளதாகவும் கண்ணப்பன் தெரிவித்தார். நேற்றைய கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (து-9)

## ஆப்காலில் குண்டு வெடிப்பு குறைந்தது 6 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலின் சர்வதேச விமானநிலையத்திற்கு அண்மையில் நடந்த குண்டு வெடிபபில் 3 பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட குறைந்தது 6 பேர் கொல்லப்பட்டார்கள்.

தலைநகர் காபூலில் நுழைந்துள்ள வெளிநாட்டவரைத் தாக்குவதற்கு இதுபோன்ற 60 தற்கொலைப்படை வீரர்கள் திட்டமிட்டுவருவதாக தலிபான் செய்தித் தொடர்பாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (து-9)

WORLD NEWS

உலக தரிசனம்



ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலின் சர்வதேச விமானநிலையத்திற்கு அண்மையில் நடந்த குண்டு வெடிப்பில் 3 பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட குறைந்தது 6 பேர் கொல்லப்பட்டார்கள்.

தற்கொலைப் படையைச்சேர்ந்த ஒருவரை பொலிஸார் கைது செய்ய முயன்றபோது அவர் வெடி குண்டை வெடிக்கச் செய்ததால் இச் சம்பவம் நிகழ்ந்ததாக அதிகார பூர்வத் தகவலகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே இந்தத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு தலிபான் பொறுப்பேற்றுள்ளது.

துள்ள வெளிநாட்டவரைத் தாக்குவதற்கு இதுபோன்ற 60 தற்கொலைப்படை வீரர்கள் திட்டமிட்டுவருவதாக தலிபான் செய்தித் தொடர்பாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (து-9)

உலக தரிசனம்

# ஈரானில் கடத்தப்பட்ட ஐரோப்பிய சைக்கிள் ஓட்டிகள் மூவரும் விடுதலை

(தெஹரான்)

ஈரானில் அண்மையில் கடத்தப்பட்ட 3 ஐரோப்பிய சைக்கிள் ஓட்டிகளும் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டதாக அந்த நாட்டின் உள்விவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.


2ஜேமனியர்களும் ஐரிஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவருமே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

டிசம்பர் மாதம் 2ஆம் திகதி ஈரானின் எல்லைப் புறத்தில் வைத்து இவர்கள் கடத்தப்பட்டனர்.

போதைப்பொருள் கடத்துபவர்கள் அல்லது கொள்ளைக் கோஷ்டியினர் இவர்களைக் கடத்தியிருக்கலாம் என்று ஈரான் அமைச்சர் தெரிவித்தார். (து-9)



நாடோடிகள் கால்நடைகளுக்குத் தீவனம் கிடைப்பது அரிதான கடும் குளிர் காலத்தில். ஆண்டு தோறும் ராஜஸ்தான் பாலைவனப் பகுதியிலிருந்து பசுமையான புல்வெளி உள்ள இடம் தேடி குடும்பத்தார் ஒட்டகம் சகிதமாய் மத்தியப்பிரதேச மாநிலம் ஜீராபூர் கிராமத்துக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர்.



கர்நாடக மாநிலம் சாம்ராஜ் நகர் அருகேயுள்ள மல்லய்யனபுர கிராமத்தைச் சேர்ந்த குருமல்லே கௌடவுக்குச் சொந்தமான ஆடு கடந்த வெள்ளிக்கிழமை ஈன்ற 6 கால்களுடைய ஆட்டுக்குட்டி.

# ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்; கடித வெடிகுண்டில் இருந்து உயிர்தப்பினார்

(நியூயோர்க்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவா லொமாரோபுறோடி கடிதவெடி குண்டு ஒன்றிலிருந்து மயிரிழையில் உயிர்தப்பியுள்ளார்.

இத்தாலிய முன்னாள் ஜனாதிபதியான இவர் மீது நடத்தப்பட்ட இந்த இரண்டாவது தாக்குதல் முயற்சி குறித்த விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

இத்தாலியின் பொலானியா நகரத்திலுள்ள புறோடியின் வீட்டுக்கு அனுப்பப்பட்ட கடிதம் ஒன்றிலேயே இந்தக்குண்டு பொருத்தப்பட்டிருந்தது.

கடிதம் திறக்கப்பட்டபோது அது வெடித்துச் சிதறியதாகவும் புறோடி காயங்கள் எதுவும் இன்றி உயிர் தப்பியதாவும்,

கிறிஸ்மஸ் பரிசு ஒன்றைப்போன்று அனுப்பப்பட்ட பொதியிலிருந்து இந்தக குண்டு வெடித்ததில் அவரது வீட்டுத் தளபாடங்களுக்கு மட்டும் சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (து-9)

# குற்றவாளிகளின் அதிகரிப்பால் சிறைச்சாலையில் இடநெருக்கடி

### யாழ்.சிறைச்சாலை வட்டாரங்கள் தகவல்

(திருநெல்வேலி)

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குற்றவாளிகள் மற்றும் சந்தேக நபர்கள் ஆகியோரின் தொகை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளதால் அங்கு பாரிய இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாக யாழ். சிறைச்சாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

யாழ்.நகரின் பிரதான வீதியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றிலேயே தற்போது யாழ். சிறைச்சாலை இயங்கிவருகிறது. சிறைச்சாலைக்கென புதிய கட்டடத் தொகுதி ஒன்றை கட்டியெழுப்புவதற்கு நீண்டகாலமாக முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் இது குறித்து எந்தவிதமான திட்டவட்டமான முடிவுகளும் கிடைக்கவில்லை.

இதேவேளை, யாழ்.குடாநாட்டில் அதிகரித்துவரும் கசிப்பு உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் மற்றும் சந்தேக நபர்கள் என பலதரப்பட்டோரும் இத்தனியார் கட்டடத்தில் இயங்கி வரும் யாழ்.சிறைச்சாலையிலேயே தமது தண்டனைக்காலங்களைக் கழித்து வருகின்றனர்.

இந் நிலையில், சிறைச்சாலையில் பாரிய இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதால் அங்குள்ளவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகி உள்ளதென சிறைச்சாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. - (த-43)

# அரசாங்க ஊழியர்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்

### மட்டு. அரச அதிபர் கோரிக்கை

(மட்டக்களப்பு)

தமிழர் தாயகப் பகுதிகளில் உள்ள அரச பணியாளர்கள் அனைவரும் தேசத்தின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு முன்வரவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் எஸ். மோனகுருசாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் 2004 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவேண்டிய செயற்திட்டங்கள் தொடர்பாக மட்டக்களப்பு பிரதேச கிராம அலுவலர்களுக்கு இடம்பெற்றதிட்டமிடல் கருத்தரங்கில் கருத்துரை வழங்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அரச அதிபர் மோனகுருசாமி தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளால் எமது பிரதேச மக்கள் பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இபபகுதியில் அழிவடைந்துள்ளவற்றை மீளப் புனரமைப்பதற்கும், இப்பகுதியின் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவும் என அரசாங்கத்தால் நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், அந்நிதி மிகப் பற்றாக் குறையாகவே இருக்கின்றது.

இவ்வாறு பெறப்பட்ட குறைந்தளவு நிதியையும் எமது பிரதேச மக்களின் அபிவிருத்திக்காக முழுமையான அளவில் பயன்படுத்துவதற்கு அரச பணியாளர்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு முன்வரவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். (த-64,8)

# தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள்

### இன்ட நஷனல் அமைப்பின் கருத்துக் கணிப்பில் முடிவு

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என கிழக்கிலங்கையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்ட நஷனல் அலர்ட் எனும் அமைப்பு "சமாதான முன்னெடுப்பும சுமுக வாழ்வும்" எனும் தலைபபில் கிழக்கிலங்கை ஊடகவியலாளர்கள் எழுத்தாளர்களிடையே மேற்கொண்ட கருத்துக் கணிப்பின் போதே அவர்களின் இக்கருத்து வெளியானது.

தடைப்பட்டுள்ள சமாதான முயற்சியினால் தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில ஏற்பட்டுள்ள கருத்தியல் தாக்கங்களைக் கணிப்பீடு செய்யும் நோக்கத்தோடு இவ் அமைப்பினர் தமிழ் முஸ்லிம் ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள் எனப் பலரிடமும் கருத்துக் கணிப்பை மேற்கொண்டனர்.

மட்டக்களப்பில் உள்ள கூட்டுறவு விடுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இக்கருத்துக் கணிப்பீட்டுக கருத்தரங்கு இன்ட நஷனல் அலர்ட் அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(த-64,8)

# அரச அதிபர் உறுதிமொழி

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில பொது நோக்கு கலாசார மண்டபம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் உறுதியளித்துள்ளார்.

மேற்படி பகுதியில் பொது நோக்கு கலாசார மண்டபம் ஒன்றை அமைத்துத்தருமாறு முன்னர் விடுக்கப்பட்டிருந்த கோரிக்கைக்கே அரச அதிபர் தற்போது பதிலளித்துள்ளதாக வடமராட்சி கிழக்குப் புனர்வாழவு புனரமைப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இப்பகுதியில் பழம் பெரும் கலைஞர்கள் நிறைந்திருப்பதுடன், புதிய பல கலைஞாகளை உருவாக்குவதற்கு வசதியாகவும் இப்பொது நோக்கு கலாசார மண்டபத்தை அமைத்துத் தருமாறும், இதற்கு வாத்தியக்கருவிகள் உட்பட அனைத்து வசதிகளையும் செய்து தருவதுடன், பயிற்சி வகுப்புக்களை நடாத்துவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு அரச அதிபரிடம் முன்னர் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-43)

# கோப்பாய்க்கோட்ட அதிபர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

எயிட்ஸ் விழிப்புணர்வுச் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இதுவரை பங்குபற்றிய, கோப்பாய்க் கோடடப் பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களைத் தமது கொத்தணி மூலாதார வள நிலையத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு ஒன்று கூடுமாறு கோப்பாயக் கோட்டக்கல்வி அதிகாரி கேட்டுள்ளார்.

(த-18)

# மங்கள சமரவீர எம்.பிக்கு நேர்ந்த புதிய அனுபவம்

(கொழும்பு)

2மணிநேர நேர்முகக் கலந்துரையாடலின் பின்னர் முன்னாள் அமைச்சரும், சுதந்திரக்கட்சி எம்.பி.யுமான மங்கள சமரவீரவிற்கு லண்டன் செல்வதற்கான விசா பிரித்தானய உயர்ஸ்தானிகராலயத்தால் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் அதற்கு அவரின் விரலடையாளம் பெறப்பட்டிருக்கவில்லை என அவரது செயலாளர் ஆனந்த தர்ம சிறி தெரிவித்துள்ளார். மங்கள சமரவீரவிற்கு விசா வழங்குவதை உயர் ஸ்தானிகராலயம் தாமதித்து வந்துள்ளதுடன் இதற்கென அவர் நேரடியாக ஸ்தானிகராலயத்திற்கு வரவேண்டுமென்று கோரியது.

தான் ஏற்கனவே பல தடவைகள பிரிட்டனுக்குச் சென்றுள்ளதாகவும், ஆனால் விசாவைப்பெறுவதற்கு நேரடியாக வருமாறு ஒரு முறையேனும் தான் கோரப்படவில்லை என்றும் ஒவ்வொரு தடவையும் தன்னுடைய அதிகாரிகளே அதனைப்பெற்று வந்ததாகவும் சமரவீர தெரிவித்திருக்கிறார்.

தனது நாட்டிற்கு அனுமதிப்பதற்கு இலங்கையரிடம் விரல் அடையாளம் பெறுவது என்ற பரிட்டிஷ் அரசின் தீர்மானம் தனது அடிப்படை உரிமைகளை மீறும் செயல் என சமரவீர மேன் முறையீட்டு நதிமன்றில் மனுசெய்திருந்தார். இதன் காரணமாகவே விசா பெறுவதற்கு அவரை நேரில் வருமாறு பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயம் பணித்திருக்கிறது. (த-6)

# 48 ஓட்டங்களால் இலங்கை அணியை பாகிஸ்தான் வென்றது

இந்தியாவில் நடைபெற்று வருகின்ற மூன்று நாடுகளின் "ஏ" அணிகள் பங்குபற்றுகின்ற முக்கோண ஒருநாள் போட்டித்தொடரில் கடந்த சனிக்கிழமை கல்கத்தாவின் ஈடன் ஹாடன் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் பாகிஸதான் "ஏ" அணி, 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை "ஏ" அணியை வெற்றி கொண்டுள்ளது.

## விளையாட்டுச் செய்திகள்



அவுஸ்திரேலியாவில் மெல்போனில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான முதல் இன்னிங்ஸில் இடதுகையில் காயம் ஏற்பட்டு அணி பயிற்சியாளர் எர்ரோல் ஆல்காட்டுடன் மைதானத்தைவிட்டு வெளியேறுகிறார் ஆஸி.கப்டன் ஸ்டீல்வோ (இடது).

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் "ஏ" அணி 48.3 ஓவர் முடிவில் சகல விககெற்றுக்களையும் இழந்து 244 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் "ஏ" அணி சார்பில் பைலால் இக்பால் 57 ஓட்டங்களையும், நவீட்லத்தீப் 50 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்திருத்தனர். பந்துவீச்சில் இலங்கை "ஏ" அணி வீரரான பேர்வீஸ் மக்றூப் 53 ஓட்டங்களுக்கு 4 விக்கெற்றுக்களை கைப்பற்றினார்.

பதிலுக்கு 245 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை "ஏ" அணியினர் 44.5 ஓவா முடிவில் 196 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெற்றுக்களையும் இழந்து. துடுப்பாட்டத்தில் நவீட்நவாஸ் 47 ஓட்டங்களையும், ஜெயவர்த்தன 41 ஓட்டங்களையும பெற்றனர். பந்துவீச்சில் பாகிஸ்தான் "ஏ" அணி வீரான முகமட் ஹாபீஸ் 29 ஓட்டங்களுக்கு 3 விக்கெற்றுக்களைக் கைபபற்றியிருந்தார்.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக பாகிஸ்தான் "ஏ" அணிசார்பில் 50 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்த நவீட்லத்தீப் தெரிவு செய்யப்பட்டார். இந்த போட்டித் தொடரில் பாகிஸ்தான் "ஏ" அணியானது தான் பெற்றுக் கொண்ட முதலாவது வெற்றி இதுவாகும். மேலும் இத்தொடரில் முதலிரு போட்டிகளிலும் வெற்றி பெற்றிருந்த இலங்கை "ஏ" அணியானது அடுத்த இருபோட்டிகளிலும் தோல்வியைச் சந்தித்திருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது.


(த-68)

# இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்ற இலங்கை -இந்திய "ஏ" அணிகள

கல்கத்தாவில நடைபெற்று வரும் மூன்று நாடுகளின் "ஏ" அணிகள் பங்குபற்றும் ஒருநாள் கிரிக்கெற்போட்டித் தொடரின் இறுதிப போட்டிக்கு இலங்கை மற்றும் இந்திய "ஏ" அணிகள் தகுதி பெற்றுள்ளன. நேற்று முன்தினம் நடைபெற்ற பாகிஸ்தான் அணியுடனான போட்டியில் இந்திய "ஏ" அணி 4 விக்கெற்றுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதை அடுத்து இறுதிப போட்டிக்கான தமது வாய்ப்பை உறுதி செய்து கொண்டது.

மழை காரணமாகத் தாமதமாகத் தொடர்ந்த இந்தப் போட்டியை 25 ஓவர்கள் கொண்டதாகமட்டுப் படுததப்பட்டிருந்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான "ஏ" அணியினர் 22.2 ஓவர் முடிவிலேயே தமது சகல விக்கெற்றுக் களையும் இழந்து 97 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய "ஏ" அணி 22.2 ஓவர் முடிவில் 6விக்கெற்றுக்களை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. துடுப்பாட்டத்தில் இந்திய "ஏ" அணி சார்பில் டி.மொங்கியா ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

கல்கத்தாவில் இன்று நடைபெறும இறுதிப் போட்டியில் இலங்கை, இந்திய "ஏ" அணிகள் மோதவிருக்கின்றன. இவ்விரு அணிகளும் ஏற்கனவே நடைபெற்ற இத்தொடரின் தமக்கிடையேயான இரு போட்டிகளில் தலா ஒவ்வொரு போட்டிகளில் வெற்றி பெற்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்(த-68)



இரட்டைச்சதம் அடித்த ஆஸி.வீரர் ரீக்கி பொண்டிங் கிரீஸை தொடுவதற்கு ஸ்டம்ப் அவுட் செய்கிறார் இந்திய விக்கெட் கீப்பர் பார்த்திவ் படேல்.

> கருவும் காலமும் செய்கையும் செய்யும் அருவினையும் மாண்டது அமைச்சு.
> -குறள்-

## வலம்புரி

# ஆறவிட்டால் ஆபத்து

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அதிகாரத்தில் இருந்த மூன்று அமைச்சுக்களையும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பொறுப்பேற்றுக் கொண்டதையடுத்து அரசும் விடுதலைப் புலிகளும் முன்னெடுத்த சமாதான முயற்சிகள் தடைப்பட்டுப் போயுள்ளது.

இதன் காரணமாக சமாதான முயற்சிகளின் ஏற்பாட்டாளராகப் பணியாற்றிய நோர்வே தனது சமாதான முயற்சியை ஒத்தி வைத்தது. இவையெல்லாம் மூன்று அமைச்சுக்களையும் ஜனாதிபதி பொறுப்பேற்றுக் கொண்டதையடுத்து நடந்த நிகழ்வுகள்.

மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்றுக் கொண்ட ஜனாதிபதி, தேசிய அரசொன்றை அமைக்க முன்வருமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு அழைப்பு விடுத்தார். ஜனாதிபதியின 'தேசியஅரசை' பிரதமர் ஏற்றுக்கொள்ளவில்லையாயினும, அழைப்பையேற்று மூன்று தடவைகள் ஜனாதிபதியைச் சந்தித்தார். முடிபுகள் எதுவுமில்லை.

இந் நிலையில், சமாதான முயற்சிகளைத் தொடராமல் இருப்பது. பிரதமர் ரணிலின் பொறுப்பற்ற செயலென ஜனாதிபதி அறிவித்திருப்பது அரசியலில் பெரும் குழப்பத்தை யேற்படுத்தியுள்ளது. பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடம் இருக்கும் போது என்னால் சமாதானப் பேச்சுக்களைத் தொடர முடியாதென்பது பிரதமரின் நியாயம்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதாயின் அதற்கு முப்படைகளினதும் ஒத்துழைப்பு மிக மிக அவசியம். ஆனால் முப்படைகளையும் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைப் பிரதமர் இழந்துவிட்டார். ஆக, ஜனாதிபதியின் பொறுப்பில் பாதுகாப்பு அமைச்சு இருக்கும் போது, எவ்வாறு புலிகளுடன் நான பேசமுடியுமென்ற பிரதமரின் கேள்வி நியாயமானதொன்றே.

அதேவேளை ஆட்சி அதிகாரமுள்ள ஓர் அமைப்புடனேயே தாம் பேசமுடியுமெனவும் விடுதலைப் புலிகள் திட்டவட்டமாகக் கூறியுள்ளனர். நிலைமை இவ்வாறு இருக்கும் போது சமாதான முயற்சியைத் தொடராமல் இருப்பது பிரதமரின் பொறுப்பற்ற செயலென்பதும், மூன்று அமைச்சுக்களையும் நான பொறுபபேற்க முன்னதாகவே, சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டுவிட்டதெனக் கூறுவதும் ஜனாதிபதியின் பொறுப்பற்ற தன்மையையே காட்டுகின்றது.

ஜனாதிபதியும், பிரதமரும் அதிகாரக் கதிரைக்காகப் போட்டியிடுகின்றனர். அவர்கள் இருவரும் தமக்குள் மோதிக் கொள்வது, அவர்களைப் பொறுத்தவரை ஓர் சுவாரசியமான நிகழ்வாக இருக்கலாம். ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் தங்கள் உரிமைக்காக-உயிருக்காக-சுதந்திரத்திற்காகப் போராடுகின்றனர். எனவே, தடைப்பட்ட சமாதானத்தின் ஒவ்வொரு நீட்சியும் தமிழர்களுக்கு ஆபத்து என்பதால் ஏதோ ஒரு முடிபுக்குத் தமிழினம் வரவேண்டியது கட்டாயமாகும்.

# யாழ்.குடாநாட்டில் இளைஞர்களிடையே என்றுமில்லாதவாறு மதுபாவனை அதிகரிப்பு

## யாழ்.மதுவரித் திணைக்கள உயர் அதிகாரி தகவல்

(யாழ்ப்பாணம்)

இளைஞா மட்டத்தில் அதிகரித்துள்ள மதுபாவனை காரணமாக யாழ்.குடாநாட்டில் மாதாந்தம் 5 இலட்சம் போத்தல் சாராயம் மற்றும் பியர் என்பன விற்பனை செய்யப்படுவதாகத் தெரியவருகின்றது.

யாழ்ப்பாணம் மதுவரித் திணைக்களத்தின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில், இவ்வருடம் 80கசிப்பு உற்பத்தி, விற்பனைச் சம்பவங்களும், 73சட்டவிரோத சாராய விற்பனை, மற்றும் 80சட்டவிரோத கள்விற்பனைகளும் இடம்பெற்றுளளதாக யாழ்.மதுவரித் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி அனைத்து விற்பனைச சம்பவங்கள் தொடர்பாகவும் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், 10இலட்சத்து 28 ஆயிரத்து 280ரூபா தண்டப் பணமாக அறவிடப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் என்றும் இல்லாதவாறு தற்போது மாதாந்தம் 5லட்சம் போத்தல் சாராயம் மற்றும் பியர் என்பன விற்பனை செய்யப்படுகின்றன. இதிலும் விசேடமாக இளைஞர் மட்டத்தில் காணப்படும் அதிகரித்த மதுபாவனை காரணமாகவே அதிகளவான மதுபானங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

யாழ்குடாநாட்டில் கசிப்பு உற்பத்தி அதிகரித்தமைக்கு இங்கு நிலவும் வேலைவாய்ப்பின்மை மற்றும் வறுமைநிலை என்பனவே காரணமாக அமைந்துள்ளன எனவும் அவ் உயர்அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மதுவரித் திணைகளத்தின் செயற்பாடுகள் யாழ்ப்பாணம், சங்கானை, பருத்தித்துறை மற்றும் மல்லாகம் ஆகிய 4இடங்களில் மாத்திரமே இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-16)

## கலாசாரப் போட்டியில் இரு முதலிடங்கள்

# யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவருக்கு ஜனாதிபதி விருது கிடைத்தது

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்ட கலாசாரப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் வீணை இசையிலும் மிருதங்க இசையிலும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் முதலிடத்தை பெற்றுள்ளனர்.

வீணை இசையில் பல்கலைக்கழக கலைப்பீட இறுதியாண்டு மாணவியான நல்லூரைச் சேர்ந்த குமுதா சோமசுந்தரக் குருக்களும் மிருதங்க இசையில் பல்கலைக்கழக கலைப்பீட 3ஆம் வருட மாணவன்ான யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த பத்மநாதன் சியாமகிருஷ்ணாவும் முத லிடத்தைப் பெற்றுள்ளனர்.

மேற்படி போட்டியில் முதலிடத்தைப் பெற்றமைக்காக ஜனாதிபதி விருது நேற்றையதினம் மகரகமவில் வைத்து வழங்கப்பட்டுள்ளது. (த)

# அரச அதிபரிடம் கோரிக்கை

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள சேதமடைந்துள்ள சனசமூக நிலையங்களைப் புனரமைப்புச் செய்யுமாறு அப்பகுதி சனசமூக நிலையங்களின் சம்மேளனம், யாழ் அரச அதிபர் மற்றும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோரிடம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகள் காரணமாக வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள பல சனசமூக நிலையங்கள் சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன. ஆயினும், சேதமடைந்துள்ள இவற்றை மீளப் புனரமைப்பதற்கு எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

எனவே, இப் பகுதியிலுள்ள சேதமடைந்துள்ள சனசமூக நிலையங்களை மீளப் புனரமைப்புச் செய்வதுடன், அழிவடைந்துள்ள தளபாடங்களையும் மீளக் கொள்வனவு செய்து தருமாறு மேற்படி கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-43)

# சேவை நலன் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கோட்டத்தில் எயிட்ஸ் விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபட்டோருக்கான சேவைநலன் பாராட்டு வைபவம் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப 11.00மணிக்கு கரவெட்டிப் பிரதேச சபை ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் எயிட்ஸ் விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபட்டோருக்கு சேவை நலன் பாராட்டுப் பத்திரம் வழங்கப்படவுள்ளதாக வடமராட்சிக் கோட்ட அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (த-18)

# திருநகர் குடியிருப்பில் சுகாதாரச் சீர்கேடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகரிலுள்ள திருநகர் குடியிருப்பில் வசிக்கும் பொதுமக்கள் சீரான மலசல கூட வசதி இன்றிப்பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

40 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட மேற்படி 10 மலசல கூடங்களும் இன்றுவரை எந்தவித புனரமைப்பும் செய்யப்படாததால் கதவுகள் இன்றியும், சேதமடைந்தும் காணப்படுகின்றன.

இதனால் மேற்படி குடியிருப்பில் வசிக்கும் மக்கள் பலத்த சுகாதாரச் சீர்கேட்டை எதிர்நோக்கியிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-3)

# நேற்றுமுதல் தென்பகுதியில் சுகாதார சேவை ஊழியர்கள் கறுப்புப்பட்டிப் போராட்டம்

(கொழும்பு)

தென்பகுதி வைத்தியசாலைகளில் பணிபுரியும் சுகாதார சேவைகள் ஊழியர்கள் சம்பள முரண்பாடுகளை தீர்க்கக் கோரி நேற்றைய தினம் கறுப்புப் பட்டிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மூன்று கட்டங்களாக தமது சம்பளத் தொகைகள் பூர்த்தியாக்கப்படுவதை மாற்றுமாறும தற்போது நிலவும் சம்பள முரண்பாடுகளை தீர்க்கக் கோரியுமே நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்ட இச் சுகாதார சேவைகள் ஊழியர்களின் கறுப்புப் பட்டிப் போராட்டம் தொடர்ந்து ஒரு வார காலமாக நடைபெறவுள்ளது.

சுகாதார சேவைகள் ஊழியர்களுக்கான சம்பள நிலுவைகள் மூன்று கட்டங்களாக எதிர்வரும் 2004,2005,2006ம் ஆண்டுகளில் பூர்த்தியாக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் வைத்தியர்களுக்கான சம்பள நிலுவைகள் கடந்த 97ம் ஆண்டு முதலே வழங்கப்பட்டு வருகின்றன.

இச் செயற்பாடானது வைத்தியர்களையும் சுகாதார சேவை ஊழியர்களையும் வேறுபடுத்திக் காட்டுவதாக அமைவதுடன், வைத்தியர்களுக்கே சகல சம்பள உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன. எனவே தமது சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கும் சம்பள நிலுவைகளை வழங்கும் காலப்பகுதியை குறைக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறும் கோரியே நேற்றுமுதல் சுகாதார ஊழியர்கள் கறுப்புப் பட்டிப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதாக முத்துகல சுகாதார சேவைகள் ஊழியர் தொழிற்சங்க அதிகாரியொருவர் தெரிவித்தார். (18)

## கடந்த வாரம் நடைபெற்ற

# பாசையூர் கிராம மட்டத்திலான விளையாட்டுப்போட்டி முடிவுகள்

(சுண்டுக்குளி)

பாசையூர் புனித அந்தோனியார் இளைஞர் விளையாட்டுக் கழகம் பாசையூர் கிராம மட்டத்தில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வருகிறது.

இப்போட்டித் தொடரில், கடந்த வாரம் நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு :-

**கடலில் நடத்தல்**

முதலாம் இடம் - வி.கமில்ரன்
இரண்டாம் இடம் - ஏ.சியோன்
மூன்றாம் இடம் - ஏ.சுகந்தன்

**கடலில் நீந்துதல்**

முதலாம் இடம் - வி.கமில்ரன்
இரண்டாம் இடம் - எஸ். றெபி
மூன்றாம் இடம் - ஏ. பவுண்

**கயிறு இழுத்தல் (ஆண்கள்)**

முதலாம் இடம் - திருமலை அணி
இரண்டாம் இடம் - ராசா அணி

**கயிறு இழுத்தல் (பெண்கள்)**

முதலாம் இடம் - திருமலை அணி
இரண்டாம் இடம் - ராசா அணி

**தலையணைச் சண்டை**

முதலாம் இடம் -றெமில்சன்
இரண்டாம் இடம் - எஸ். பிரபா
மூன்றாம் இடம் - எம். ஜிந்தா

**முட்டியுடைத்தல்**

முதலாம் இடம் - எம்.ஜிந்தா
இரண்டாம் இடம் - கே. தபன்
மூன்றாம் இடம் - வி.கமில்ரன்

(த-110)

## தினசரி தியானம்

### மகிழ்ச்சிக்குரிய வழிகள்

யாரையும் ஏளனம் செய்யாதீர்கள். யாரிடமும் கடுகடுப்பாக இருக்காதீர்கள். புலன்களை அடக்குங்கள். எப்போதும் உற்சாகமாக இருங்கள். கடந்தவற்றைப் பற்றி எண்ணாதீர்கள். நல்ல வழியில் சீரான வளர்ச்சியை மேற்கொள்ளுங்கள். ஆசைகள், கோபம் ஆகியவற்றை நீக்குங்கள். கர்வத்தை ஒதுக்கித் தள்ளுங்கள். உங்கள் பார்வையை உட்செலுத்துங்கள். அழ்ந்து சிந்தியுங்கள். உண்மையான இன்பத்தைத் துய்ப்பீர்கள்.

சுவாமி சிவானந்தர்

# பேரூர் ஆதீனமுதல்வரின் அருளுரை நாளை

(யாழ்ப்பாணம்)

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். மாவட்ட பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் நாளை புதன்கிழமை மாலை5.30மணிக்கு தமிழ்நாடு பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் அருளுரை வழங்கவுள்ளார்

நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இருந்து தமிழ் நாடு பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் மங்கள வாத்தியம் சகிதம் விழா மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-18)

# மருந்தகத்துறை அபிவிருத்திக்கு 2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சுகாதார அமைச்சின் கீழ் வரும் 9 சுகாதாரப் பிரிவுகளிலுள்ள மருந்தகத்துறை அபிவிருத்திக்கென உலக வங்கி 2 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக வெளிவாரி வைத்தியர்கள் பயிற்சித் திட்டத்தின் பிரதம இணைப்பாளர் இ.பத்மமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மருந்தகங்களில் தற்போது நிலவும் மருந்தாளர் தட்டுப்பாட்டை நீக்கும் நோக்குடன் வெளிவாரி மருந்தாளர்களுக்கான பயிற்சிநெறி நேற்று ஆரம்பமாகியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (த-60,10)

*வேலை நேரத்தில் மாற்றம் *ஓய்வெடுக்க வசதி

# பொது நிர்வாக சேவையை சீரமைப்பதற்கு நடவடிக்கை

## அமைச்சர் வஜிர அறிவிப்பு

(கொழும்பு)

பொது நிர்வாக சேவையில் மிகப் பெரிய அளவிலான மாற்றங்களை செய்வதற்கான முன்மொழிவுகளை பொது நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சர் வஜிர அபேவர்த்தன முன் வைத்துள்ளார். பொது நிர்வாக சேவையில் மேற்கொள்ளப்படவுள்ள சீரமைப்பின் பிரகாரம் 2004ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஊழியர்களின் வேலை நேரம் காலை 7.00 மணிமுதல் பி.ப.2.00மணி என மாற்றப்படவுள்ளது. இதேவேளை அரச ஊழியர்கள் தமக்கு சாதகமான வேலை நேரத்தைத் தெரிவு செய்து கொள்வதற்கும், தமக்கு -குறித்தொதுக்கப்பட்ட வேலையை பூர்த்தி செய்வதுடன் வேலைத்தளத்தை விட்டுச் செல்வதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பொது நிர்வாக மறுசீரமைப்பிற்கான சகல முன்மொழிவுகளும் வரவு செலவுத் திட்டப் பணிப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர்,

தற்போதுள்ள தாபன ஒழுங்கு விதிகளில் திருத்தம் செய்யப்படும் போது குறிப்பிட்ட திணைக்களம் ஒன்றில் கடமையாற்றும் ஊழியர் ஒருவர், பிறிதொரு திணைக்களத்தின் வேலைகளில் ஈடுபடவும் அதற்காக மேலதிக கொடுப்பனவுகளையும் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

அதேவேளை 5நாள் வேலையை 3நாட்களில் பூர்த்தி செய்யும் அரச ஊழியர் ஒருவர் வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் ஓய்வெடுத்துக் கொள்ளலாம்.

தாபன கோவையில் செய்யப்படவுள்ள சீரமைப்பின் பிரகாரம் திணைக்களங்களில் ஊழியர்களுக்கு காணப்படும் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படுவதுடன் குறைந்த வருமானத்தைப் பெறும் அரச ஊழியர்கள் நன்மை அடையவும் முடியும் என அமைச்சர் வஜிர மேலும் தெரிவித்தார். (ந)

# பிரதமருடன் ஒப்பந்தம் செய்ய ஜனாதிபதி சந்திரிகா விரும்புகிறார்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆவலுடன் இருப்பதாகவும், ஒரு குறுகிய காலத்திற்கு ஐ.தே.மு.அரசுடன் பல்வேறு நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளை செய்ய விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டிற்கு முக்கியமான பல பொது விவகாரங்களில் அரசுடன் இணைந்து செயற்படுவதற்கு ஜனாதிபதி விரும்புவதாக அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொ.ஐ.மு உறுப்பினர் ஒருவரின் கூற்றின்படி அதிகாரங்களை-பதவிகளை பகிர்ந்து கொள்வதில் ஜனாதிபதி அக்கறை காட்டவில்லை. ஆனால் சமாதான செயற்பாடுகளை தொடர்வதற்காகவும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும் நாட்டில் நல்லாட்சியை உறுதி செயவதற்காகவுமே ஜனாதிபதி இதற்கு முன்வருகிறார் என்றும் அவர் கூறினார்.

மேலும் எதிர்காலத்தில் ஐ.தே.மு.அரசுடனான பேச்சுக்கள் அரசியல் யாப்பின் படியே ஏற்பாடு செய்யப்படும். இதுவே குறுகிய காலத்திற்குள் தேசிய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண சரியான வழியாகும்.

சமாதான முயற்சிகள் முன்னேற்றப் பாதையில் செல்வதை ஜனாதிபதி இனம் கண்டுள்ளதோடு, லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் செயற்பாடுகளை கவனிப்பதுடன் தேர்தல் முறையையும் மாற்றுதல் வேண்டும்.

அத்துடன் நாட்டின் அபிவிருத்திக்கு அவசியமான பொலிஸ் சேவையில் பாரபட்சமற்ற தன்மையையும் அவர் கவனிக்க வேண்டும் என்று அவ் உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் கட்சி அரசியலை ஒருபுறம் ஒதுக்கிவைத்து விட்டு நாட்டுக்காக உழைக்க வேண்டிய அவசியம் பற்றியும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார். (இ-6)

---

## ஜனாதிபதி 2000ஆம்...

கிய 14 நாட்களுக்குள் அவர் மீண்டும் பதவியை ஏற்காதிருந்தால் அவர் ஜனாதிபதி பதவியில் இருந்து அகற்றப்பட்டிருப்பார்.

ஜனாதிபதி 6 வருடங்களுக்குப் பதவி வகிப்பதா அல்லது முதற் கட்டம் முடிந்ததன் பின்னரே அவரின் புதிய பதவிக்காலத்தை ஆரம்பிப்பதா என்பது தீர்வு காணப்பட வேண்டிய கேள்வியென நீதித்துறை வட்டாரங்கள் கருத்துக் கூறியுள்ளன. இதேவேளை 2000ம் ஆண்டு நவம்பரில் செய்து கொள்ளப்பட்ட சத்தியப் பிரமாணத்தின்படி ஜனாதிபதியின் பதவிக் காலம் 2வது தடவையாகவும் நீடிக்கப்பட்டுள்ளது என்பதை ஜனாதிபதி அலுவலகம் கடந்த சனியன்று உறுதி செய்துள்ளது. 3வருடங்களின் முன் இது பற்றி உத்தியோக பூர்வ அறிக்கை ஒன்றையேனும் ஜனாதிபதி வெளியிடவில்லை. இதன்படி அவர் எதிர்வரும் 2006ம் ஆண்டு முடிபு வரை பதவியில் இருப்பார். ஆனால் அவரின் பதவிக்காலம் 2005ம் ஆண்டு முடிவடைய வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு என்று ஐ.தே.மு.வட்டாரங்கள் வலியுறுத்துகின்றன.

(இ-6)

# எயிட்ஸ் விழிப்புணர்வு பிரசாரம் மும்முரமாக இடம் பெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் எயிட்ஸ் விழிப்புணர்வுப் பிரசாரம் நேற்று 6வது நாளாகவும் நடைபெற்றது.

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் சங்கானை, அளவெட்டி, மல்லாகம், சித்தங்கேணி, சுழிபுரம், தொல்புரம், இளவாலை, விளான் போன்ற இடங்களில் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கிராமங்கள் தோறும் வீடுவீடாகச் சென்றும், பொது இடங்களில் மக்களை ஒன்றிணைத்தும் எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துக்கள் வழங்கப்பட்டதுடன் துண்டுப் பிரசுரங்களும விநியோகிக்கப்பட்டன.

விளான் அந்தோனியார் ச.ச. நிலையத்தில் யாழ்.மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் யோ.கலைவிழி எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துக்களை வழங்கினார்.

முன்பள்ளி ஆசிரியர்கள், சுகாதாரத் தொண்டர்கள், தேசிய எழுச்சிப் பேரவையின் பிரதிநிதிகள் உட்பட பலர் பிரசாரப் பணியில் ஈடுபட்டனர். (ச)

---

## முஸ்லிம்களை....

யடைவதாகவும் இதனைப் பிரபாகரனே உறுதிப்படுத்த வேண்டும் என்பதற்காகத் தாம் நடவடிக்கைகள் எடுத்துவருவதாகவும் ஆனால் நோர்வே தரப்பினர் விலகியதால் இது மேலும் சிக்கலுக்குள்ளாகி விட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

இவ் ஒப்பந்தத்திற்கு கௌரவம் அளிக்கப்படவில்லை. முஸ்லிம்களும தனித்தரப்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. சமாதான முயற்சிகள் பயனற்றதாகிவிட்டன என ஹக்கீமும் நூஆ.தலைவர் பேரியல் அஷ்ரப் போன்றோர் தெரிவித்திருந்தனர்.

மூன்றாம தரப்பாக ஏற்றுக் கொள்ளாததில் இருந்து புலிகள் தாம் முஸ்லிம்களுக்கு எதிரானவர்கள் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்கள் என பேரியல் அஷ்ரப் தொிவித்தார். மேலும் இதற்கு முன்னரே ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடியிருந்தால் இந் நிலை ஏற்பட்டிராது என்றும் அவர் தெரிவித்தார். இதே கருத்தையே ஏனைய முஸ்லிம் தலைவர்களும் தெரிவித்துள்ளனர். இதேவேளை எதிர்வரும் தேர்தல்களில் கூட்டணி இன்றி முஸ்லிம் காங்கிரஸ் தனித்தே போட்டியிடுமென 53 அங்கத்தவர்கள் கொண்ட குழுவினர் தீர்மானித்துள்ளனர். (ந-6)

---

## காணாமல்...

கள், தமது உறவுகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தியே போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் நீதி அமைச்சரின் செயலாளரிடம் தமது கோரிக்கை

## ஒன்று கூடுக

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் கோட்ட அரசியல் பிரிவின் எயிட்ஸ் தடுப்புப் பரப்புரைப் பணியில் ஈடுபட்டு சேவை உறுதிப்பாட்டுக் கடிதம் வழங்கப்பட்ட அனைவரையும் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஒன்று கூடுமாறு யாழ். நல்லூர் கோட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர். (ச)

## ஒளிவிழா

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை புனித செபமாலை மாதா ஆலயத்தின் ஒளிவிழா இன்று பிற்பகல் 6.30 மணிக்கு ஆலயப் பங்குத்தந்தை அன்ரன் மத்தாயஸ் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகப் பாசையூர் அந்தோனியார் ஆலயப் பங்குத் தந்தை ம.யேசுரட்ணம் அடிகளாரும் சிறப்பு விருந்தினராக யாழ்.மறை மாவட்ட இளையோர் ஒன்றிய இயக்குநர் சாள்ஸ் கொலின்ஸ் அடிகளாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-51)

---

## புதிய....

போது நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுவரும் மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திசைக்க வேண்டுமென்றும் தினேஷ்குணவர்த்தனா கேட்டுள்ளார்.

இத்தேர்தல் நடைமுறை தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் உள்ள சகல மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துவது சம்பந்தமாகவும் ஆராயப்பட்டுவருகிறது. இத்தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துவதற்கு அரசியல் சாசன ரீதியிலான திருத்தங்கள் எதுவும் தேவை இல்லை என்றும் கூறினார். (வ)

---

## யாழ்ப்பாண..

அத்திட்டங்களை முன்னுரிமைப்

இலங்கை வங்கி அறிவித்தல்

# இலங்கை வங்கி அறிவித்தல்

▲ நாளை 31.12.2003 புதன்கிழமை அன்று காலை 09.00மணி முதல் மு.ப. 10.00மணி வரை மட்டும் வங்கி கொடுக்கல் வாங்கல்களுக்காக திறக்கப்படும்.

▲ இலங்கை வங்கி சேமிப்புக் கணக்கில் 31.12.2003 அன்று ரூ.100,000.00 அல்லது அதற்கு மேல் நிலுவை வைத்திருப்பவர்களில் 200 பேருக்கு சகல வசதிகளுடன் இந்தியாவில் பௌத்த புனித தலங்களுக்கு இலவசமாக சென்று திரும்ப வாய்ப்பு அல்லது பணமாக ரூ.75,000.00 வழங்கப்படும்.

அனைவருக்கும் எமது உளம் கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

இலங்கை வங்கி

உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

(C/7071)


மென்ற கோரிக்கையை வலியுறுத்தியே போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் நீதி அமைச்சரின் செயலாளரிடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜரையும் அவர்கள் கையளித்தனர்.

இதேவேளை அவர்கள் இன்று மனித உரிமை ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்திற்குச் சென்று ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

.நாளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும் இவர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். (இ)

(வ)

## யாழ்ப்பாண..

அத்திட்டங்களை முன்னுரிமைப் படுத்துவது தொடர்பான சில முடிபுகளும் எடுக்கப்பட்டுள்ளன.

இக்கலந்துரையாடலில் அமைச் ‘சரவைச் செயலாளர் ஹேராகொட, பிரதமரின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான ஆலோசகர் எஸ். சிவானந்தன், வடக்குக் கிழக்கு மாகாண சபைச் செயலாளர் எஸ். ரங்கராஜா, சிரான் அமைப்பின் பணிப்பாளர் செல்வின், யாழ்.மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ச-4)


புதுவருட மலிவு விற்பனை

New Year Sale

வாடிக்கையாளர்களின் நன்மை கருதி மார்கழி 1ஆம் திகதியிலிருந்து மார்கழி 31ஆம் திகதி வரை சகல பொருட்களுக்கும் விசேட கழிவுடன் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

லைடன் புடவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (பஸ் நிலையம் எதிர்)

சகல பொருட்களுக்கும் விசேட கழிவுண்டு

T.P : 2222381

(C/6957)



இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.12.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.